விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்:பதினாறு

Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 30 புதன்கிழமை (15.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 270

## கொழும்பு மகசின் சிறைச்சாலையில் நானும் அரசியல் கைதியாக இருந்தேன்

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

நான் அரசியல் கைதியாக கொழும்பு மகசின் சிறைச்சாலையில் நீண்டகாலமாக இருந்துள்ளேன். எனவே எனக்கு சிறை முறைமை பற்றி மிக நன்றாகத்தெரியும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற கைதிகள் நலன் தின (16ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி படிப்படியாக மேற்கொள்ளப்படும்

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான அபிவிருத்திப்பணிகளை படிப்படியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டத்தில் இம் முடிபெடுக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் அரச அதிபர் வேதநாயகம், பிரதி அமைச்சர் (16ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் பிரச்சினைகளை மூடிமறைக்க ஐ.நா.முயற்சி!

### இன்னர் சிட்டி பிரஸ் குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

**இலங்கை பிரச்சினைகளை மூடிமறைக்க ஐ.நா.செயலர் முயற்சிப்பதாக இன்னர் சிட்டி பிரஸ் குற்றம் சாட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் மற்றும் அவரது பேச்சாளர் மார்ட்டின் சினர்கீ ஆகியோர் இலங்கை, சூடான் போன்ற நாடுகளில் தீவிரமிக்க விடயங்கள் குறித்து கருத்து வெளியிடாமை குறித்து இன்னர் சிட்டி பிரஸ் கண்டனம் வெளியிட்டுள்ளது.** (16ஆம் பக்கம் பார்க்க)

## வவு.நகரசபை தலைவரின் செயலுக்கு உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா நகரசபைத் தலைவர் உறுப்பினர்களுடன் ஒத்துழைக்காமல் சர்வாதிகாரத்துடன் நடந்து கொள்வதாகத் தெரிவித்து அவருக்கு எதிராக மைதானத்தில் அமர்ந்து 10 உறுப்பினர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களாக சீரான நடவடிக்கை இன்றி பாதிக்கப்பட்ட சபை அமர்வுகளைத் தொடர்ந்து நேற்றுக் காலை நடைபெற்ற விசேட கூட்டத்திலும் சபை உறுப்பினர்கள், சபையின் நிர்வாகச் செயற்பாடுகள் குறித்து விளக்கம் கேட்டிருந்த 29 விடயங்களுக்கு விளக்கமளிக்கவில்லை எனவும் அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவந்ததும் சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விட்டு வெளியேறியதாகவும் சபை உறுப்பி (15ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு ஆதரவு அளித்த எம்.பிக்களின் உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டது


### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த லக்ஸ்மன் செனவிரட்ன மற்றும் ஏல் குணசேகர ஆகியோரின் உறுப்புரிமை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

18ஆவது திருத்தச்சட்ட மூலத்திற்கு ஆதரவளித்த ஆறு ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களில் குறித்த இருவரும் அடங்குகின்றனர்.

திருத்தச்சட்ட மூலத்திற்கு ஆதரவளித்த ஏனைய ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து (15ஆம் பக்கம் பார்க்க)



## பொன்சேகாவும் பசிலும் கைகுலுக்கி வாழ்த்து

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவும், ஜனாதிபதியின் சகோதரரும் அமைச்சருமான பசில் ராஜபக்ஷவும் நேற்றுக்காலை உயர் நீதிமன்ற முன்றலில் கைகுலுக்கி ஒருவருக்கு ஒருவர் வாழ்த்துத் தெரிவித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாகவும் அந்தப்பதவிக்குத் தானே பொருத்தமானவர் என அறிவிக்குமாறு கூறி சரத் பொன்சேகா உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் (16ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டி மன்னார் சென் சேவியர் சம்பியன்

### மானிப்பாய் இந்து மூன்றாமிடம்

(கொழும்பு)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழாவில் நேற்று நடைபெற்ற 17 வயதுப்பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் சென் சேவியர் கல்லூரி சம்பியனானது.

அத்துடன் 19 வயதுப்பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மூன்றாம் இடம் பிடித்தது.

தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவில் கடந்த 11ஆம் திகதி முதல் கொழும்பு உட்பட பல மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடை (15ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர்கள் யாழ்.செல்ல அரசு கட்டுப்பாடு விதிக்கக் கூடாது!

(கொழும்பு)

யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தின் அனைத்து இடங்களுக்கும் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகவும் எவ்வித கட்டுப்பாடுகள் இல்லாமலும் சென்று வரக்கூடிய நிலை வேண்டும் என்று இலங்கையின் ஊடகத் துறையைச் சேர்ந்த ஜாம்பவான்களில் ஒருவரான மனிக் டீ சில்வா தெரிவித்தார்.

அவர் கொழும்பில் தேசிய நல்லிணக்க ஆணைக்குழு முன் ஆஜராகி வாக்குமூலம் வழங்கினார். அதன்போதே அவர் இதனைக் கூறினார்.

வடமாகாணத்துக்கு ஊடகவியலாளர்கள் செல்லவேண்டுமானால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டிய நிலை இன்னமும் இருக்கின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டமைக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைகள் எழுதவே இல்லை.

சிங்களவர்கள் காட்டுமிராண்டித்தனமானவர்கள் என்று புலிகளால் இன்றைய தலைமுறையைச் (15ஆம் பக்கம் பார்க்க)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES &
# EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS

BCHS Eisc

ஆகிய இவ்விரு சகோதர நிறுவனங்களும் இணைந்து எமது நிறுவனத்தின் மூலம் London (UK) / USA / Canada / Newzealand / Australia போன்ற நாடுகளில் உயர் கல்வியினைக் (பட்டப்படிப்பு) கற்பதற்கு சென்ற மாணவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

எமது யாழ். கிளையிலே அடிப்படைக் கற்கைநெறிகளை நிறைவுசெய்து இவ்வருடத்திலே இங்கிலாந்து (UK) London Visa பெற்று சென்ற மாணவர்களிற் சிலர்




AFTER G.C.E A/L OR O/L

காலவிரயமின்றி நீங்கள் ஒரு சர்வதேசத்தரம் கொண்ட பட்டதாரியாகி உங்களின் எதிர்காலத்தை வளமாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்.

ஆகக் கூடியது 3 வருடத்தில் நீங்கள் ஒரு பட்டதாரி

**6 Months / 3 Months**
Foundation Diploma@BCHS Jaffna
IELTS & English @BCHS Jaffna

**2 1/2 Years**
Diploma & Degree @ London(Uk)/USA
Canada/ Australia / Newzealand

இதுவரை எமது சேவையினூடாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது உயர்கல்வியினை கற்பதற்காக வெளிநாடு சென்றுள்ளார்கள். நீங்களும் பயனடைய இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road) Jaffna.
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550, 0777585913

No.30 1/14, W A De Silva Mw,
Colombo - 06
Tel : 0112500207, 0777222422, 0714299935

---

# யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்
# BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

BCHS

To Study in UK(London), Canada, Australia, Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

**FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT**
**FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)**
**FOUNDATION DIPLOMA IN MANAGEMENT**

எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு

- இக் கற்கை நெறிகளின் Diploma & Degree பட்டப்படிப்பை 100% விசா உத்தரவாதத்துடன் நீங்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் கற்கலாம்.
- உங்களுக்கான விசா உத்தரவாதத்தினை இத்துறையில் பல வருட அனுபவமுள்ள எமது சட்டத்தரணிகள் உறுதிசெய்வார்கள்.

கல்வித்தகமை: G.C.E. (O/L) போதுமானது
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் எம்மை தொடர்பு கொள்ளவும்

**IELTS** (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
(We guarantee minimum band 6.0 Upwards)

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

**SPOKEN ENGLISH**

இன்றைய நவீன உலகத்தில் ஆங்கில அறிவின் தேவைக்கேற்றபடி இப்பாடத்திட்டமானது நடாத்தப்படுகின்றது.
வகுப்புகள் சனி, ஞாயிறு, வாரநாட்களிலும், தொழில் புரிபவர்களுக்காக மாலை நேரங்களிலும் உண்டு

**Diploma in English** **Advance Diploma Iin English**

100 % பயிற்சி

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது

100 % வெற்றி

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி { 10.09.2010, 12.09.2010, 15.09.2010 } காலை : 10.00 மணி, மாலை : 04.00 மணி

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை-கலைப்பீடம்
## ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்
### இதழியல் டிப்ளோமா (முழுநேரம்-இரண்டு ஆண்டுகள்)
### கல்வியாண்டு-2010/2012

மேற்படி முழுநேர இதழியல் டிப்ளோமா கற்கைநெறி அனுமதிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்: க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக் கழக அனுமதிக்கான தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

அனுமதிக்கான தெரிவு முறை: எழுத்துத் தேர்வும் (எழுத்து ஆற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல்) சமூக அறிவும் நேர்முகத் தேர்வும்.

கற்கைநெறிக் காலம்:- 2 ஆண்டுகள் (முழுநேரம்)

கட்டணங்கள்:-

| | |
|---|---|
| கற்கை நெறிகள் கட்டணம் | :- ரூபா 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | :- ரூபா 750.00 |
| நூலக வைப்புப் பணம் (மீளளிக்கத்தக்கது) | :- ரூபா 750.00 |
| நூலகப் பயன்பாடு | :- ரூபா 1000.00 |
| மொத்தம் | :- ரூபாய் 22,500.00 |

விண்ணப்பப் படிவங்கள் :- யாழ்ப்பாணப் பல்கலைக் கழக காசாளர் கருமபீடத்தில் ரூபா 100 செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளை அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபாலிலோ, நேரிலோ *உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி* என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி:- 08.10.2010

- பதிவாளர் (சி/1182) 14.09.2010

---

# APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS

The applications are called for training of counselors. This is a one year, week end (Saturday & Sunday) course that consists of 450 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read, write and understand
2. A pass in Advanced Level
3. Age between 25 and 45 years
4. Interested in social Activities


The applicants will have to buy the special application form our office and submit them before the 25th of September 2010. Only 25 applicants will be selected to follow this training. The forms are available at our office.

*For further details please contact:*
**'AHAVOLI'**
**INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY**
Affiliated to National University of Ireland, Galway
St.Patrick's Road, Jaffna.
Contact No: 021 222 2856

(2468)

---

# மரண அறிவித்தல்
## பொன்னையா சுந்தரலிங்கம் (ஐயா)



11.09.2010 சனிக்கிழமை காலமான கோப்பாயைச் சேர்ந்த பொன்னையா சுந்தரலிங்கம் (ஐயா) அவர்களின் இறுதிக் கிரியைகள் 15.09.2010 புதன்கிழமை இன்று காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-
வேம்படி, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
T.P.: 077 0200735

தகவல்:
குடும்பத்தினர்

(2470)

# இன்று ஒரு தகவல்

## பட்டினி பயன் தரும்

நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் நமது உடம்புக்குள் எவ்வ எவோ கோளாறுகள் இருக்கலாம்.

எல்லாவற்றையும் செலவில்லாமல் சரி பண்ணுவதற்கு சிறந்த வழி – சாப்பிடாமல் இருப்பதுதான்.

உண்ணாநோன்பு என்பது உற்றஹு ரீதியான ஓய்வு என்று சொல் கிறார்கள். இது நோயைக் குணப்படுத்துவதுடன் நோய் வரா மலுந்தடுக்கிறது.

சாப்பிடாமல் இருந்து தான் பிரார்த்தனை, தியானமெல்லாம் செய்வார்கள்.

இது வெறும் தெய்வீகம் மட்டுமல்ல.

விஞ்ஞானம் கலந்த தெய்வீகம்.

சாப்பிட்டுவிட்டு தியானம் செய்கிறேன். பிரார்த்தனை செய்கி றேன் என்று ஆரம்பித்தால் உங்களுக்கு தெய்வீக சிந்தனை வராது. தூக்கம்தான் வரும்.

உடம்பில் உண்டாகும் தேவையற்ற கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு 'பட்டினி' அவசியம்.

இயற்கை வைத்தியத்தில் உண்ணா நோன்பு ஒரு முக்கிய மான சிகிச்சை.

உண்ணாநோன்பு எப்பொழுது இருக்க வேண்டும்? எப்படி இருக்க வேண்டும்? (அது நோயின் தன்மையைப் பொறுத்தது.)

சரி, சாப்பிடாமல் இருப்பதற்கு நான் தயார்! என்று துணிச்ச லாக சொல்பவர்கள் மட்டும் நான் சொல்வதைக் கேட்டுக் கொள் ளுங்கள்.

உண்ணாநோன்பை எப்பொழுது ஆரம்பிப்பது? எப்பொழுது முடிப்பது? இதைப்பற்றி நீங்கள் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும்.

குளிர்காலத்தில் இது வேண்டாம். உடம்பில் போதுமான தெம்பு இல்லையென்றாலும் இது வேண்டாம்.

நரம்புத் தளர்ச்சி, பயந்த சுபாவம், கோபதாபம் அதிகமாக உள்ளவர்கள் எல்லாம் விலகியிருங்கள்.

முதல் தடவையாக உண்ணாவிரதம் இருக்கப் போகிறீர் களா? அப்படியானால் நீங்கள் ஒரு வரைமுறையை வைத்துக் கொள்ளுங்கள்.

வாரத்துக்கு ஒரு நாள் சாப்பாட்டை நிறுத்துங்கள். அதற்குப் பதிலாக பழச்சாறு மட்டும் குடியுங்கள். முதலில் காலையுணவை கைவிடுங்கள். அதற்குப்பின் மதிய உணவை நிறுத்துங்கள். அதற்குப்பின் பழச்சாறு மட்டும் குடித்துக்கொண்டு ஒருநாள் முழுவதும் சாப்பிடாமல் இருங்கள். இப்படி படிப்படியாக செய்ய வேண்டும். சாப்பிடாமல் இருக்கும் சமயத்தில் நீங்கள் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா?

அதிர்ச்சி–ஆரவாரம் இருக்கக் கூடாது.

அமைதியான சூழ்நிலை, நல்ல காற்றோட்டம் வேண்டும்.

ஈரமான அல்லது அதிக வெதுவெதுப்பு அளிக்கக்கூடிய ஆடை கள் அணியக்கூடாது.

சுத்தமான குடிநீரைப் பருக வேண்டும்.

மனதில் நல்ல நம்பிக்கையும் பூரண ஓய்வும் மிக முக்கியம்.

உண்ணாவிரதத்திற்கு முன்னும் பின்னும் ஒருவார காலத் திற்கு கெட்ட பழக்கம் எதுவும் இருக்கக்கூடாது.

உண்ணாவிரதத்தை முடிக்கும் போது பழச்சாறு–இளநீர் ஏதாவது குடித்து அதை முடிக்க வேண்டும்.

உண்ணாவிரதமிருக்கும் போது உங்களுடைய உடம்பில் சில அறிகுறிகள் தெரியலாம். தலைச்சுற்றல், தலைவலி, பலவீனம், இதயப்படபடப்பு, நாக்கில் மா படிதல், ருசி இல்லாமல் போவது இப்படியான அறிகுறிகள் இருக்கலாம்.

அதற்காக கவலைப்பட வேண்டாம். உடல் வெப்பநிலை, நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம் இவையெல்லாம் வித்தியாசமாக இருக்கலாம். இங்கே வைத்தியம் என்ன சொல்கிறதென்றால்... உடம் பில் சேர்ந்த நச்சுக் கழிவுகளெல்லாம் உண்ணாநோன்பு காலத்தில் வெளி யேற்றப்படுகிறதாம்.

உடல் பருமனைக் குறைப்பதற்கு உண்ணாநோன்பும் உணவுக் கட்டுப்பாடும் ஒரு நல்லவழி. இடைவெளி விட்டிருக்கும் விரதத்தினால் உடம்புக்கு புது உற்சாகம் ஏற்படுகிறது.

எடைகுறைகிறது. உண்ணாவிரதத்தினால் என்ன பலன் தெரியுமா?

உடல் உறுப்புகளுக்கு ஓய்வு கிடைக்கிறது. உடம்பில் சேர்ந்த நச்சுப் பொருளும் தீமை பயக்கும் பக்ரீரியாக்களும் வெளியேறுகிறது.

நோய்க்கு இது ஒரு நல்ல சிகிச்சை. மனநோயைக் கூட இது கட்டுப் படுத்துகிறது.

புகையிலை– போதைப் பொருள்– பழக்கத்திலிருந்து விடுபட இது உதவியாக இருக்கிறது.

எடை குறைகிறது. தோற்றப் பொலிவு கிடைக்கிறது. உற்சாகம் வருகிறது. ஐம்புலன்களுக்கும் புத்துணர்ச்சி கிடைக் கிறது.

அதனால் சாப்பிடாமல் இருப்பதற்கு யாரெல்லாம் தயாரோ அவர்களெல்லாம் முன்னால் வாருங்கள். என்ன இது? எல்லோ ரும்போய் விட்டீர்கள். இங்கே நான் மட்டும் தனியா நின்று கத்திக் கொண்டிருக்க வேண்டியது தானா?

கத்திக் கத்தி எனக்கும் பசியெடுப்பது போல இருக்கிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அதிபர் பதவிக்கான வெற்றிடம்

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த யா/நல்லூர் காசிப்பி ள்ளை வித்தியாலயம், யா/நவக்கரி அ.மி.த.க பாடசாலை, யா/கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை ஆகிய வற்றில் (தரம்-3) அதிபர்பதவி வெற்றிடங் கள் காணப்படுகின்றன. யாழ் கல்வி வலயத்திற்குட்பட்ட மாகாண பாட சாலைகளில் கடமைபுரியும் அதிபர் தரத்தை சேர்ந்தவர்களிடமிருந்தும் சேவை நீடிப்பில் உள்ளோர் தவிர் ந்த ஆசிரியர் சேவை வகுப்பு I மற் றும் 2-I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவையை சேர்ந்தவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டுமே ஆசிரியர் தரத்தைச் சேர்ந்தவர்க ளின் விண்ணப்பங்கள் பரிசீலிக் கப்படும்.

விண்ணப்பப்படிவங்களை ஆசி ரிய நிர்வாகக் கிளையில் பெற்று பூர ணப்படுத்தி எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் ஒப்ப டைக்குமாறு யாழ்ப்பாண வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி. அ.வேதநா யகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இரத்ததான நிகழ்வு

சென்பற்றிக்ஸ் கல்லூரி இன்றாக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு 201 மாணவர்கள் இரத்ததானம் செய்து தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-54)

# அழகியற் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்வி அலுவ லகத்தினால் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்பட இருந்த கோட்டமட்ட அழகியற் போட் டிகள் தவிர்க்க முடியாத கார ணத்தினால் பிற்போடப்பட்டுள்ள தாகவும் நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2)

# ஆயுள்வேத சமூக சுகாதார வைத்திய உதவி உத்தியோகத்தர்களாக 16 பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்துக்கு 16 வைத்திய உதவி உத்தியோகத்தர்கள் ஆயுள் வேத ஆணையா ளரினால் நியமிக்கப்பட்டுள் ளார்கள்.

இவர்கள் அனைவரும் சிங்கள மொழி பேசுபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் யாழ். மாவட்டத்திற்கு ஒருவரும், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு முறையே நான்கு பேரும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஐவ ரும், வவுனியா மாவட்டத்திற்கு இருவ ருமாக நியமனம் பெற்றுள்ளார்கள்.

இவர்கள் தற்போது சேவையி லுள்ள ஆயுள்வேத பொது சுகாதார வைத்திய அதிகாரிகளிற்கு உதவி யாளர்களாக செயற்படுவார்கள்.

எனவே எந்தவொரு சந்தர்ப்பத் திலும் இவர்கள் ஆயுள்வேத சிகி ச்சை வழங்கலில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் என வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் திட்ட மிடல் பிரிவு மருத்துவ உத்தியோகத் தர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

15.09.2010
(ஆவணி 30, புதன்கிழமை)
அட்டமி பின்னிரவு 4.48 மணி வரை
கேட்டை முன்னிரவு 8.27 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணி வரை
சுபநேரம் 4.33-6.03 மணி வரை

**மேடம்** மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிட லாம், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, உடல் சோர்வாகக் காணப்படும்.

**இடபம்** வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவ டையும் நாள், மகிழ்ச்சியான செய்தி யொன்றை காலை நேரத்திலேயே கேட்கும் சூழ்நிலை உருவாகும், வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**மிதுனம்** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறும் நாள், கூட்டுத்தொழிலில் எதிர் பார்த்த இலாபம் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகை யில் ஏற்பட்ட அச்சுறுத்தல் அகலும்.

**கடகம்** மனதிற்கினி சம்பவங்கள் நடைபெறும் நாள், கல்வி முன்னேற்றம் கருதி ஒரு தொகையை செலவு செய்யும் சூழ் நிலை உருவாகும், அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள்.

**சிங்கம்** தாய் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், அஞ்சல் வழிச்செய்தி நெஞ்சை நெகிழ வைக்கும், புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகம் உண்டு.

**கன்னி** தைரியத்தோடும் தன்னம்பிக்கையோ டும் செயற்படும் நாள், எடுத்த செயலை எளிதில் முடிப்பீர்கள், வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும்.

**துலாம்** உங்கள் பெருமைக்கு இன்று பரிசு கிடைக்கும், விவாகப் பேச்சுகள் நல்ல முடிவுக்கு வரும், அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவர், பணப் புழக்கம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** விரும்பிய காரியம் விரும்பியபடியே நடைபெறும் நாள், வீட்டுத் தேவை கள் பூர்த்தியாகும், குடும்ப உறுப்பி னர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பணவரவு திருப்தி தரும்.

**தனுசு** பயணத்தால் பலன் கிடைக்கும், குல தெய்வ வழிபாட்டை நிறைவேற்றும் எண்ணம் மேலோங்கும், மாற்றங்களினால் ஏற்றம் பெறுவீர்கள், பக்குவமாகப் பேசி வெற்றிபெறுவீர்கள்.

**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங் கள் கூடும் நாள், பெரியோர் தொடர்பால் புகழடைவீர்கள், வருமானம் அதிகரிக்கும் நாள், இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** நண்பர்களின் ஒத்துழைப்பு கிட்டும், உடல் உற்சாகமாக காணப்படும், தூர தேச செய்திகள் மகிழவைக்கும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிட்டும்.

**மீனம்** தடைப்பட்ட காரியங்கள் நிறை வேறும், பிரயாணங்கள் மூலம் நன்மை யடைவீர்கள், தொழிலில் ஆர்வம் காணப்படும், விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள்.

வளவன்

# சுனாமியாலும், யுத்தத்தாலும் அநாதரவாகியுள்ள தமிழ்ச்சிறுமி

ஆழிப்பேரலை அனர்த்தத் தாலும் யுத்தத்தாலும் குடும்ப அங்கத்தவர்களைப் பறிகொ டுத்த தமிழ்ச் சிறுமி ஒருவர் (வயது 13) உறவினர்களால் கைவிடப்பட்ட நிலையில் சிகி ரியா வாசிகளால் காப்பாற் றப்பட்டிருக்கிறார்.

சிகிரியா வாசிகள் இவ ரைப் பொலிஸாரிடம் கைய ளித்துள்ளார்கள். மட்டக்க ளப்பு மாவட்டத்தின் கிரான் பகுதியைச் சேர்ந்த இவர் ஆழிப்பேரலை அனர்த்தத் தில் பெற்றோரை இழந்து விட்டதாக கூறப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களான இவ ரின் சகோதரர்கள் காணாமல் போயுள்ளனர்.


இந்நிலையில் உறவுக்காரப் பெண் ஒருவருடன் இருந்து வந் துள்ளாரென்றும் அப்பெண் சிறு மியை சிகிரியாவுக்கு அழைத்து வந்து விட்டு கைவிட்டு சென்று விட் டார் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை பொலிஸார் சிறுமியை கைவிட்டுச் சென்ற உறவுக்காரப் பெண்ணை தேடி வலை வீசி உள்ளார்கள். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல் வேலி | மருதனார் மடம் | யாழ்ப் பாணம் | சாவகச் சேரி |
|---|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | -- | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 75 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 90 | 80 | 100 | 110 |
| தக்காளி | 70 | 80 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 50 |
| கோவா | 70 | 60 | 80 | 80 |
| கரட் | 80 | 60 | 100 | 40 |
| பூசணி | 40 | 35 | 50 | 40 |
| புடோல் | 30 | 30 | 50 | 40 |
| வாழைக்காய் | 60 | 40 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 55 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 40 | 80 | 80 |
| பாகற்காய் | 70 | 80 | 100 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 60 | 40 | 70 | 70 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 20 | 20 | 50 | 40 |
| கறிமிளகாய் | 60 | 50 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 70 | 120 | 100 |
| போஞ்சி | 120 | 110 | 130 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 80 | 70 |
| கீரை – 1 பிடி | 20 | 15 | 25 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35-40 | 40-45 | 30 | 30 |






யாழ்.மாவட்ட அதிபர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கான 'வாழ்க்கைத் திறனொன்றாக ஆங்கில மொழி' நிகழ்ச்சித் திட்டத்திற்கான பொதுக் கூட்டம் நேற்று காலை யாழ்.இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சுனிமல் பெர்னாண்டோ மங்கள விளக்கேற்றுவதையும், வடமாகாண கல்வி, கலாசார அமைச்சின் செயலளார் எல். இளங்கோவன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் மற்றும் சிரேஷ்ட ஆலோசகர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் - கரன்)

## "காந்தீயம்" இதழ் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினால் வெளியிடப்படும் காந்தீயம் இதழின் ஓகஸ்ட் ,செப்டெம்பர் மாத இதழ் வெளி வந்துள்ளது.

இவ் இதழின் இலவச பிரதியொன்றை தபால் மூலம் பெறவிரும்புவோர் 5ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர், காந்தீயம் இல. 774 , ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்து பெற்றுக்கொள்ள முடியுமென இதழாசிரியர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## மணவாளக் கோல திருவிழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கிழக்கு பரமானந்த கனகராவளவு விநாயகர் ஆலய மணவாளக் கோல திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விநாயகருக்கு அபிஷேகம் மற்றும் வசந்த மண்டபபூசை நடைபெற்று சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.

இதில் விசேட பூசைகளை ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ கிருஸ்ண பரமானந்தக் குருக்கள் நடத்தி வைக்கவுள்ளார். (ஸ்ரீ-7)

## முத்தமிழ் சங்கமம் விழாவை முன்னிட்ட கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் வருடாவருடம் நடத்தப்பட்டுவருகின்ற தமிழ் விழா இவ்வருடம் முத்தமிழ் சங்கமம் என்ற பெயருடன் நடத்தப்படவுள்ளதுடன் இதில் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பேச்சுப் போட்டியும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிறுகதை பற்றிய கருத்தரங்கும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை பண்ணிசைப்போட்டியும் நடைபெறவுள்ளது.

இதில் குறித்த மூன்று தினங்களிலும் மாலை 6 மணிக்கு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. அத்துடன் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இசை பற்றிய கருத்தரங்கும் மாலை 6 மணிக்கு சங்கீதக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

மேலும் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நாடகப் போட்டியும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாடகப் பயற்சிப்பட்டறையும், 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பண்பாடு பற்றிய கருத்தரங்கும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பட்டமளிப்பு நிகழ்வுகளும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கருத்தாடலும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் மேற்குறித்த தினங்களில் மாலை 6 மணிக்கு கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ-4)

## இடமாற்ற அறிவித்தல்

(தனங்கிளப்பு)

இதுவரைகாலமும் இல.55 RG கட்டடம் கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலிருந்து யாழ். மக்களுக்கு சேவையாற்றி வந்த ஆயுட்காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (LIC) நாளை வியாழக்கிழமை முதல் இல.281 1/1 மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம் (ஞானம்ஸ் ஹோட்டல் அருகில்) என்ற முகவரியில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4-37)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர்கல்லூரியின்பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில், அதிபர் திருமதி.வேதநாயகி பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே இக் கூட்டத்திற்கு பெற்றோர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பனை அபிவிருத்திச் சபையில் தொழில் வாய்ப்பு

பருத்தித்துறை வீதி, சரசாலையில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் பனந்தும்பு உற்பத்தி நிலையத்திற்கு கீழ்வரும் பணிக்கான தொழில் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதில் இயந்திரம் ஊடாக பனந்தும்பு அடிப்பவர்கள் மற்றும் தரமான பனம் மட்டைகள் சரசாலை உற்பத்தி நிலையத்திற்கு ஒரு ரூபாய் வீதம் வழங்குபவர் ஆகியோரிற்கான தொழில் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதில் இயந்திரம் ஊடாக பனந்தும்பு அடிப்பவர்களுக்கு துண்டுக்கூலி அடிப்படையில் வேதனம் வழங்கப்படவுள்ளது.

மேற்படி தொழில் வாய்ப்பு பெற விரும்புவோர் கண்டி வீதியில் அமைந்துள்ள தேசிய வீடமைப்புச் செயலகத்திற்கு எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 021 222 2034 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-7)

## பன்னிரு திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வடக்கு மருதடி அருள் மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் நாளை வியாழக்கிழமை ஆவணி மூல நட்சத்திர நாளில் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தேழு நாட்கள் தினமும் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடை பெறவு ள்ளது.

இந்நிகழ்வில் அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு பன்னிரு திருமுறை முற்றோதல் பற்றி அறிவுரைகளை வழங்கவுள்ளார்கள். (ஸ்ரீ-2)

## விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி

(தனங்கிளப்பு)

விவசாயத் திணைக்களம் (விரிவாக்கம்), விவசாயத் திணைக்களம் (ஆராய்ச்சி),யாழ் பல்கலைக்கழக விவசாயபீடம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், சுதேச மருத் துவத்திணைக்களம், நீர்ப்பாசன திணைக் களம், வளிமண்டலவியல் திணைக்களம், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,பனை வள அபிவிருத்தி சபை ஆகியன இணைந்து சந்தைப் பொருளாதாரத்தை நோக் கிய "சூழல் பாதுகாப்புடனான விவசாய உற்பத்தி" என்னும் தொனிப்பொருளின் கீழ் விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் , விவசாய ஆராய்ச்சி நிலையம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்கள விவசாயிகள் கூடம், வானிலை அவதான நிலையம் ஆகியன இணைந்த வளாகத்தில் நடைபெறவுள்ளது.இக்கண்காட்சியில் அனைவரும் கலந்து பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர். (ஸ்ரீ-4-37)

## சம்பந்தர் விருது - 2009

(யாழ்ப்பாணம்)

சம்பந்தர் விருது அறக்கட்டளை சபையினால் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக வருடாவருடம் சம்பந்தர் விருது வழங்கப்பட்டு வருகின்றது.

இதில் 2009 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கப்படவுள்ளது.

இவ்விருதுக்கான பணப்பரிசிலான 10 ஆயிரம் ரூபாவை எழுத் தாளர் சம்பந்தனின் மகள் திருமதி திரிவேணி கஜன் வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

இந்த விருதுக்காக உரியவர்கள் தங்கள் நூலின் ஒரு பிரதியை அது எத்துறை சார்ந்ததாயினும் தனித்துவமானதாக இருந்தால், செங்கை ஆழியான், 75/10ஏ, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு சபையின் இணைப்பாளர் செங்கை ஆழியான் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)




## மாபெரும் கல்விக்கண்காட்சியும் சாகச நிகழ்வுகளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாணவர் மகிழ்களம் மாபெரும் கல்விக்கண் காட்சியும் சாகச நிகழ்வுகளும் கல்லூரியின் பீடாபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆகியவற்றின் பிரதம இணைப்பாளரான வை.ஏ.என்.டி யாப்பா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக கல்வியியற் கல்லூரிகளின் பணிப்பாளர் திருமதி டபிள்யூ.பி.ஆர்.சில்வா கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கல்விக் காட்சியும் 21 ஆம் திகதி வரை சாகச நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இதில் கல்விக்காட்சி காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடம் பெறவுள்ளதுடன் சாகச நிகழ்வுகள் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறவுள்ளது. அத்துடன் மாணவர்களுக்கு 30 ரூபாவும் ஏனையோருக்கு 50 ரூபாவும் அறவிடப்படும் என குறிப்பிடப்படுகிறது.

மேலும் இச்சாகச நிகழ்வுகளில் ரயிலில் பயணம், பாதாளக் கிணற்றில் கார் மற்றும் சைக்கிள் ஓட்டம், வட்டக்கூட்டினுள் ஓடும் மோட்டார் சைக்கிள், மெரிக்கோ ரவுண்ட் பலூன் துள்ளல், மந்திரவித்தைகள் ஆகியன இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# நூலகங்களுக்கான நூல்களை அன்பளிப்புச் செய்வோர் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்திசேவா சங்கம் கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் நூலகங்களை ஆரம்பிக்கவுள்ளது.

இந்நூலகங்களுக்கு புத்தகங்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் காந்தி நிலையம், அகில இலங்கை காந்தி சேவா சங்கம், உருத்திரபுரம், கிளிநொச்சி என்ற முகவரியிலும் அல்லது இல 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும் தொடர்புகொண்டு நூல்களைச் சமர்ப்பிக்கலாம் எனவும் குறிப்பாக மகாத்மா காந்தி தொடர்பான நூல்கள் பெரிதும் வரவேற்கப்படுவதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.ஜி.தங்கவேல் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

# சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக முன்பள்ளி சிறார்களுக்கு வைப்புத் திட்டம்

(பூநகரி)

கிளிநொச்சி உளவநூல் முன்பள்ளியில் தம்பிராசா சனசமூக நிலையத்தினால் சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக 31 சிறுவர்களுக்கு தலா 100 ரூபா வீதம் வைப்புச் செய்யும் நிகழ்வு நடைபெற்றது.


இந்நிகழ்விற்கு கண்டாவளை பிரதேச சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.தி.ஜெயமாலினி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அத்துடன் தம்பிராசாபுரம் பாடசாலை அதிபர் திருமதி இ.கந்தசாமி கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

பணத்தின் சேமிப்புச் சிறப்புப் பற்றி மாணவர் அறிய வேண்டுமென தனது உரையில் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சனசமூக நிலையத் தலைவர் பி.பத்மாவதி தலைமையில் நடைபெற்றது.

(ஸ்ரீ-2-84)



சாவகச்சேரி டச்சுவீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய ஆடிவேல் பவனியில் ஆலயகுரு பூசை நிகழ்த்துவதையும் பவனிக்காக ஆடிவேல் அலங்கரித்து ஆயத்தமாய் இருப்பதனையும் படத்தில் காணலாம்.(படம்:-சாவகச்சேரி நிருபர்)


# இடமாற்ற அறிவித்தல்

இது வரை காலமும் இல 55,RG கட்டடம், கன்னாதிட்டி வீதி,யாழ்ப்பாணம் எனும் முகவரியிலிருந்து யாழ். மக்களுக்கு சேவையாற்றி வந்த **ஆயுட்காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை)** வரையானது யாழ். மக்களுக்கு இலகுவான சேவைகளை வழங்கும் பொருட்டு யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகிலேயுள்ள **இல 281 1/1 மணிக்கூட்டு வீதி, (ஞானம்ஸ் ஹொட்டேல் அருகில்)யாழ்ப்பாணம்** எனும் புதிய முகவரியில் எதிர்வரும் **16.09.2010** முதல் புதுப்பொலிவுடன் தனது சேவைகளை யாழ்.மக்களுக்கு வழங்கத் தயாராகிக்கொண்டிருக்கின்றதென்பதனை வாடிக்கையாளர் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

LIC

Life Insurance Corporation (Lanka) Ltd.

தலைமைக்காரியாலயம்

இல 29/2 ஷார்னல் கட்டடம் விசாகா வீதி,கொழும்பு-04.

(சி/1178)


# சிறைகளில் செல்லிடத் தொலைபேசி செயலிழக்கச் செய்யும் கருவிகள்

## அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு



(கொழும்பு)

சிறைச்சாலைகள் அனைத்திலும் செல் லிடத் தொலைபேசிகளைச் செயலிழக்கச் செய்யும் சாதனங்களைப் பொருத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கைதிகள் செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக இத் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச் சர் டியூ குணசேகர கொழும்பில் நேற்று நடைபெற்றவைபவமொன்றில் பேசுகை யில், இதனைத் தெரிவித்தார்.

போதைப்பொருகள் கடத்தல்காரர்கள் உட்பட பல கைதிகள் சிறையில் இருந்த வாறே செல்லிடத் தொலைபேசிகளைப் பயன் படுத்தி குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(ஸ்ரீ-2)

# கொழும்பில் குறைந்த வசதியுடன் வசிக்கும் மக்களுக்கு புதிய வீடுகள்

## நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரில் குறைந்த வசதிகளோடு வசிக்கின்ற மக்களுக்கு புதிய வீடுகளை வழங்குவதற்கான விரைவான செயற்றிட்டத்தை நகர அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பித்துள்ளது.

இதற்காக 500 கோடி ரூபாய் நிதி கடன், பத்திரங்களை வழங்குவதன் மூலம் திரட்டப்படவுள்ளது.

இலங்கை வங்கியின் ஊடாக 5 வருட காலப்பகுதியில் 11 முதல் 12 சதவீத வட்டியில் இந்தக் கடன் பத்திரங்கள் வழங்கப்படவுள்தாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நிகால் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரில் 65 ஆயிரம் பேர் குறைந்த வசதியுடன் கூடிய வீடுகளில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு இந்த திட்டத்தின் மூலம் வீடுகள் வழங்கப்படவிருக்கின்றன. இதுவரை இந்த மக்கள் வசித்த பிரதேசங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளன.

இதன் மூலம் அதிகார சபை வருமானத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாக பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டவர்களுக்கு 20 சதவீத கடன் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன் ஆரம்பவைபவம் பாதுகாப்பு செயலாளரின் தலைமையில் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

(ஸ்ரீ-7)


இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்!

2009 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பாரிய வெற்றியின் பெருமிதத்துடன் Pico Events வழங்குகிறது.

அனுமதி இலவசம்



Organized by pico Events

செப்டம்பர் 18-19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில்

யாழ் கல்விக் கண்காட்சியானது அதிகரித்து வரும் கல்வி, உயர்கல்வித் தேவைகளை வடமாகாணத்தில் நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடி கண்காட்சியாகும். முதலாவது கண்காட்சியின் வெற்றியின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மாணவர் சமூகத்தினை நேரடியாக ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு விரும்பும் எவருக்கேனும் இதுவே பொருத்தமான இடமாகும். முதலாண்டு கண்காட்சியைப் போன்றே இந்நிகழ்வும் உலகின் பலபாகங்களிலுமுள்ள முன்னணி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருக்கும்.

காட்சிப்படுத்தப்படும் அனைத்துப்பிரிவுகள்

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வணிகக்கல்லூரிகள், மற்றும் பொறியியல் மருத்துவ, மருந்தாக்க, சுகாதார, விமானசேவை, தகவல் தொழில்நுட்பம், பல்லூடகம், இணைய வடிவமைப்பு, முகாமைத்துவம், வர்த்தகம் என்பவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள்.

நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி, விற்பனையும் சந்தைப்படுத்தலும், வங்கியியல், சட்டம், கணக்கீடு, புதுத்தோற்ற வடிவமைப்பு.

ஆடைதயாரிப்பு, அழகுக்கலையும் ஆட்கள் அலங்கரிப்பு, கட்டடக்கலையும், நில அளவீடும், ஹோட்டல்துறை மற்றும் உணவு வழங்கல், மொழிகள், இசைநடனம், மயக்கமூட்டற் கற்கைகள், தொழிற் பயிற்சி மற்றும் ஆதாரசேவைகள் (நூல்கள், வெளியீடுகள், கல்விசார் துணைக்கருவிகள், கணினி, காகிதாதிகள்)

JEF

Jaffna Education Fair 2010

BRITISH COUNCIL Daily Mirror pico

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
27 - 12 - 1923



மறைவு
16 - 08 - 2010

## அமரர் S.V. முருகேசு

(பிரபல தொழிலதிபர் எஸ்.வி.எம். கூட்டு நிறுவனங்கள்)

இறைபதம் அடைந்த எங்கள் ஐயா!
மாதம் ஒன்று கடந்தாலும் -எங்கள்
மனதில் இருந்து உங்கள் நினைவுகள்
போகாது ஐயா!
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்களிடம் கற்றவையும்
நீங்கள் கற்பித்தவையும்-எங்களால்
மறக்க முடியாது ஐயா!
வாழ்க்கை என்றால்,
உழைப்பு மட்டுமல்ல
இறைபக்தி
சமூக சேவை
மற்றவர்களை மதித்து வாழ்வது
என்றெல்லாம் எங்களுக்கு புரியவைத்த ஐயா
நீங்கள் எங்களுடன் இல்லை என்றாலும்
நாங்கள் உங்கள்
நினைவுடன் தான் வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
171D, பொன்சேகா வீதி, கொழும்பு- 05
தொ.பே.இல 021 222 8899

(சி-1176)





கிளிநொச்சி புளியம்பொக்கணையில் உள்ள நாகேந்திரபுரம் பகுதிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் மேற்கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்தின் மேற்படி கிராமத்தின் மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் பாதிக்கப்பட்ட பெண்களைச் சந்தித்து கலந்துரையாடுவதையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடுபுடைவை பொதிகளை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வழக்கு விசாரணைகளை பார்வையிட சரத்பொன்சேகாவிற்கு அனுமதி

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான வழக்கு விசாரணைகளை பார்வையிடுவதற்கு ஜன நாயகத் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவிற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட் சிகளின் பொது வேட்பாளராக போட்டியிட்ட சரத் பொன்சேகா விரும்பினால் வழக்கு விசா ரணைகளை பார்வையிட சிறைச்சாலை நிர்வாகம் அனுமதி அளிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் அசோக் என் சில்வா மற் றும் ஷிராணி பண்டாரநாயக்கா, ஸ்ரீபவன், இமாம் , இரத்நாயக்க உள்ளிட்ட நீதவான்க ளினால் இந்த மனு பரிசீலனைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் விதிகளுக்கு உட்பட்ட வகையில் நடைபெறவில்லை எனவும் இத னால் மீளவும் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனவும் சரத் பொன்சேகா அடிப்படை உரி மை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள் ளார்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனா திபதி தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சரத் கொஹன்காகே உள்ளிட்ட 21 வேட்பாளர்கள் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸா நாயக்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாப னத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க மற் றும் வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப் பிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தல் தொடர் பில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு அடிப்படை நியமங்களுக்கு புறம்பான வகையில் தாக் கல் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சார்பில் ஆஜரான சட்டத் தர ணி டி.எஸ் .விஜேசிங்க தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலவச ஆங்கில வகுப்பு

(சாவகச்சேரி)


சாவகச்சேரி லயன் கழகத்தினரால் கல்விப் பொதுத்தராதர சாதாரணதர மற்றும் உயர் தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடம் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பேச்சுப் பயிற்சி மற்றும் வாசிப்பு,எழுத்துப் பயிற்சி ஆகிய வற்றை மேம்படுத்தும் முகமாக இலவச ஆங்கில வகுப்பை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி பயிற்சியில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் சாவகச்சேரி நகரில் அமைந் துள்ள விமலாஸ் கடையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மேற்படி கழகச் செய லாளர் அறிவித்துள்ளார். (2-7-29)

# கட்சி செயற்குழுவின் தீர்மானத்திற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்

# ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)



கட்சி செயற்குழுவின் தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

25 பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்க எடுத்துள்ள தீர்மானம் குறித்து கருத்து வெளி யிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன்,

இதேவேளை கட்சியின் செயற்குழு எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை கூடி கட்சியின் பொதுக்கூட்டத்தை நடாத்தும் திகதியை அறி விக் கும் என தெரிவிக்கப்படுகிறது.

மறுசீரமைப்பு வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் பொதுக் கூட்டம் நடத்தப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரி வித்துள்ளார்.

கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக் கைகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழர்களின் பிரவேசம் குறித்து முன்னெச்சரிக்கை விடுத்த கனேடிய இராஜதந்திரிகள்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள் ஏராளமானோர் கனடாவுக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசிக் கக் கூடும் என்று கடந்த ஜனவரி மாதத்தி லேயே அந்நாட்டு அரசுக்கு கொழும்பில் உள்ள கனே டிய தூதரகத்தைச் சேர்ந்த இரா ஜதந்திரிகள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

ஓசியன் லேடி கப்பலில் 76 இலங்கைத் தமிழர்கள் கனடாவைச் சென்றடைந்து இரு மாத காலம் கழிந்த நிலையில் அவர் கள் இராஜதந்திரப் பொதி மூலம் கனேடியக் குடிவரவுத் திணைக்களம் உட்பட சம்பந்தப் பட்ட திணைக்களங்கள் ,அமைச்சுக்கள், அதிகாரிகளுக்கு இந் நிலைமை குறித்து விரிவான அறிக்கை அனுப்பி இருக்கின்றார் கள்.

கனேடிய குடிவரவுத் திணைக்கள ஆலோசகர் றிச்சாட் குறூலாண்டிற்கும் இவ்வறிக்கை கிடைக்கப் பெற்றிருக்கின் றது. கடந்த ஒன்பது மாதத்துக்கு முன்னர் அனுப்பி இருந்த அவ் வறிக்கையில் இலங்கை அரசினால் நலன்புரி முகாம்க ளில் இருந்து ஒரு இலட்சம் முதல் ஒரு இலட் சத்து 50 ஆயிரம் வரையிலான பொது மக்கள் விடுவிக்கப்பட்டு இருக்கின்றார்கள் என்றும் அரசியல் சூழ்நிலை ,சமூக பொரு ளாதார பிரச்சினைகள் காரணமாக அவர்க ளில் குறிப்பிடத்தக்க தொகையினர் சட்ட விரோத மான முறையில் வெளிநாடுக ளுக்குச் செல்ல முயற்சிக்கக் கூடும் என்றும் அவர்களால் பெரிதும் விரும்பப்படுகின்ற நாடாக கனடா இருக் கக்கூடும் என்றும் தூத ரகத்தினர் விலாவாரியாக விளங்கப் படுத்தியிருக்கிறார்கள்.

அத்துடன் அரசு இக்கப்பல் பயணங் களை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தக் கூடிய முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டிருக்கின்றார்கள். (ஸ்ரீ-2)

◆ A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
◆ வெளிநாடு செல்ல விருக்கும் மங்கையரே!
◆ உள்ளூரில் தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளீரே!

இதோ உங்களுக்கான 3மாத பயன்மிகு பயிற்சிகள்

கிழமைநாள் பயிற்சிகள் ஆரம்பம்: 22-09-2010

- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்
- கூந்தல் அலங்காரம்
- பப்றிக் வர்ணம் தீட்டுதல்
- கைவேலை
- பூவேலை

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் 15 நாள் Facial, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure, முடிஅயன்செய்தல், Perming, நிறமூட்டுதல், முடிவெட்டுதல் பயிற்சிகளும் நடைபெறும்.

தையல் அறிவு அற்றவர்களுக்கான 6மாத உடை தயாரித்தல் பயிற்சிகள்
தையல் தெரிந்தவர்களுக்கான 15 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேற்குறிப்பிட்ட தையல் பயிற்சிகள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறவுள்ளன.
ஆரம்பம்: 19-09-2010 (ஞாயிறு)

மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

25வது ஆண்டில் கலாலயா பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

அரிய சந்தர்ப்பம்

வாழ்க்கை என்பது உங்களைத் தெரிந்து கொள்ளும் ஒரு தேடல்

உங்கள் வாழ்க்கையை வளமுடன் அமைத்துக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

Email :sk sivalingam 6@gmail.com
(@gmail.com)
T.P: 0777651719 (2462)

# ஈழத்தவர் வரலாறு

36

## 6.சிங்கைப் பரராசசேகரன் தொட்டு சங்கிலி செகராசசேகரன் வரை

## (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

சிங்களப்படைக்கும், தமிழ்ப்படைக்கு மிடையிலான முதலாவது சண்டை சாவகக் கோட்டை (சாவகச்சேரி)யில் நிகழ்ந்தது. அங்கு விஜயநகர மன்னனது சேனாவீரர்கள் சப்புமல்குமரயாவின் படையை எதிர் கொண்டு தோல்வியைத் தழுவிக் கொண்டனர். அதன் பின் சிங்களப்படை யாழ்ப்பாணப் பட்டினத்தை வந்தடைந்தது. அவனது படை முன் எதிர் நிற்கவியலாது, தமிழ்ப்படை தோற்றது. கனகசூரிய சிங்கையாரியன் தன்னிரு புதல்வர்களுடன் இந்தியாவிற் கோடிப் போனான்.


சப்புமல்குமரயா யாழ்ப்பாணத்தலை நகரிட் புகுந்து, மதங்கொண்டகளிரெளக் கண்டாரைக் கொன்று, அந்த நகர் ஆவணங்கெல்லாம் இரத்த வெள்ளம் பாய்ந்தோடும் ஆறுகளாக்கி நகரில் விளங்கிய மாட மாளிகைகளை எல்லாம் இடிப்பித்து தரைமட்டமாக்கினான். யாழ்ப்பாண நகர் சிதைந்து போனது. அவ்வேளை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலும் தகர்த்தெறியப்பட்டது. கி.பி. 1248 ஆம் புவனேகபாகு எனும் அமைச்சரால் முதன் முதல் கட்டப்பட்ட நல்லூர்க் கந்த சுவாமி கோயில், கி.பி.1450 ஆம் ஆண்டு சப்புமல்குமரயாவின் படையெடுப்பால்-தகர்த்தழிக்கப்பட்டது. தான் புரிந்த பாவத்திற்குப் பரிகாரம் தேடுவான் போன்று, யாழ்ப் பாண நகரியை மீண்டும் புதுப்பித்த சப்புமல் குமரயா, அழிந்து போன கந்தசுவாமி கோயிலையும் மீண்டு ஆக்கினான். சப்புமல் குமரயா என்ற செண்பகப்பெருமாள் தமிழ்க் குருதி தன்நாளங்களில் ஓடக் கொண்டவனாதலாலும் தமிழுறபத்தியாளனேயாகிய அளகேஸ்வரன் காலந்தொட்டு ஜயவர்த்தன கோட்டையிலே வழிபாடு பயின்று வந்தமையாலும், கோகில சந்தேசமுடையார் அவனைப் புத்த மதத்தாபகரெனப்புகழ்ந்தோதியவிடத்தும் தமிழ்ப்பிரசைகளுக்கிதமாய்த் தமிழ்த் தெய்வ வழிபாடுகளை யாழ்ப்பாணத்தில் வளர்த்திருப்பான் என்பதிற் சிறிதும் சந்தேக மன்று என சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுகிறார்.

ஆரியச்சக்கரவர்த்தியோடு செண்பகப் பெருமாள் கடும்போர் நிகழ்த்திய நாட்களில் அரண்களும் இராசதானியும் பெரிதும் அழிவுற அவற்றைச் செண்பகப் பெருமாள் திருத்தியமைத்தானென்றே கொள்ள வேண்டும்.

சப்புமல்குமராயா யாழ்ப்பாணப்பட்டித்தில் கோட்டை களையும் காவலரண்களையும் அமைத்தான் என்று ராஜவலிய சொல்வனவும் இக்கருத்துக்கு ஆதாரமாகவுள்ளன.

ஆரியச் சக்கிரவர்த்திகளின் பழைய தலைநகரமாக விளங்கிய யாழ்ப்பாண நகரி பாழாய் விட்டமையினால், இவன் நல்லூரைத் தலைநகராக்கிக் கொண்டான். உண்மையில் பதினைந்தாம் நூற்றாண்டிலேயே நல்லூர் தலைநகரமாக மாறியது.

யாழ்ப்பாணத்தை வென்ற புகழ் சிங்கள நாடெங்கும் பரவிப் பேரானந்தத்தை விளைவித்தது. இவ்வெற்றியைப் புகழ்ந்த கோகில சந்தேசவெனும் குயில்விடு தூதைப்பாடிய



நல்லூர் கந்தசுவாமி கோயிலின் இன்றைய தோற்றம்

சிங்களப் புலவர் ஒருவர் சப்புமல் குமரயாவை ஆரிய வேட்டையாடும் பெருமாள் எனப் புகழ்ந்துள்ளார். சப்புமல் குமரயா ஸ்ரீ சங்க போதி புவனேகபாகு என்னும் சிம்மாசனப் பெயரோடு யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனானான்.

சிறிசங்கபோதி புவனோகவாகு, நல்லூரிலிருந்து உத்தரதேசத்தை பதினேழு வருடங்கள் ஆட்சி செய்தான். கி.பி.1467 ஆம் ஆண்டு அவன் தென்னிலங்கைக்குத் திருப்பிச் செல்ல நேர்ந்தது. அவனுடைய வளர்ப்புத் தந்தை ஆறாம் பராக்கிரமபாகு இறந்து போக, அவனது பேரன் ஜெயவீரன் கோட்டைக்கு அரசனானான். அதனை விரும்பாத ஸ்ரீசங்க போதி புவனேகபாகு, விஜயபாகு என்பவனை யாழ்ப்பாணத்தின் அரசனாக்கி விட்டு, கோட்டைக்கு மீண்டு ஜெயவீரனைக் கொன்று விட்டு, அரச கட்டிலேறினான். தருணத்தை எதிர் பார்த்துத் திருக்கோவிலூரில் கரந்துறைந்திருந்த கனகசூரிய சிங்கையாரியனும் அவனது இரு புதல்வர்களும் சேனைகளுடன் வந்து விஜயபாகு வைக் கொன்று, இழந்த இராச்சியத்தை மீட்டுக் கொண்டனர்.

### 6.2 சிங்கைப் பரராசசேகரன்

கனகசூரிய சிங்கையாரியன் மீண்டும் இழந்த மணிமுடியைத் தரித்துக் கொண்டான். அவன் பின் அவனது மூத்த மகனானான பரராசசேகரன் கி.பி.1478 ஆம் ஆண்டு சிங்கைப் பரராசசேகரன் என்ற சிம்மாசனப் பெயரோடு மன்னனானான். நல்லூரை மேலும் சிறப்பு மிக்க நகராக்கியவன் சிங்கைப் பரராசசேகரன் ஆவான்.

சப்புமல் குமரயாவின் படையெடுப்பால் அழிவுற்ற தேவாலயங்களை இவன் புனருத்தாரணம் செய்திருப்பதாகக் கொள்ளவிடமுண்டு. விசயகாலிங்க ஆரியனால் கட்டப்பட்ட கோயில்களை இவனே அமைத்ததாக வரலாற்று மயக்கமுள்ள போதிலும், சட்டநாதர் கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோவில், கைலாயநாதர் கோயில், வீரமாகாளியம்மன் கோயில் என்பவனவற்றை இவன் மீண்டும் புனரமைத்தான் எனக் கொள்ளல் வேண்டும்.

சிங்கைப் பரராச சேகரனே தமிழ்சங்கம் ஒன்றை நல்லூரில் நிறுவிய அரசனாவான். பரராசசேகரனின் சகோதரன் செகராசசேகரன் சிறந்த தமிழறிஞனாவான்.

பரராச சேகரம் என்ற வைத்திய நூல், செகராச சகரம் என்ற சோதிடநூல், இரகு வம்சம் என்ற வைத்திய நூல், கெராசசேகரம்

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்


என்ற சோதிட நூல், இரகுவம்சம் என்ற காவியநூல், என்பன பரராச சேகரன் காலத்தில் இயற்றப்பட்டவை என வைபவமாலை கூறும். இரகு வம்சத்தை இயற்றிய அரகேசரி பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரென்பது ஒரு சாராரின் முடிவு.

சிங்கைப் பராசசேகரனுக்கு சிங்கபாகு, பண்டாரம், பரநிருபசிங்கன், சங்கிலி என நான்கு ஆண்மக்களும், ஒரு பெண்ணுமாக ஐந்து குழந்தைகள் இருந்தனர்.

(தொடரும்)

# இலக்கிய வகைமை நோக்கில் கையறு நிலை

01



இருவர் மாட்டு நிகழ்ந்த உறவில் ஒருவர் இறந்து படமற்றொருவரின் தாங்க இயலாத தன்னுணர்ச்சிப் புலம்பலைக் கையறுநிலை என்பர். இவ்வுணர்வினைப் பண்டைய இலக்கணம், இலக்கியம், காப்பியம், சிற்றிலக்கியம் ஆகியன தத்தம் கால இலக்கிய வகைமைக்கு ஏற்ப வெளிப்படுத்துகின்றன. இவ்வுணர்வு வெளிப்பாட்டுத் திறத்தை இலக்கிய வகைமை நோக்கில் ஆய்வதே இக்கட்டுரையின் பொருண்மையாகும்.

**கையறுநிலை – பொருண்மை**

கையறுநிலை என்பது புறத்திணை சார்ந்தது. இதனைக் காஞ்சித்திணைப் பாலதாகத் தொல்காப்பியர் சுட்டுவார். உற்ற துணைவர், ஆதரித்தோன், தலைவன், வீரன் என வாழ்ந்தவர்கள் இறந்தால் அவர் தம்மால் பயனுற்றவர்கள் செயலற்று வருந்திப் பாடும் நிலை கையறுநிலை ஆகும்.

கழிந்தோர் தேஎத்து கழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறுநிலையும்

(தொல்.பொருள் – 77) என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையாசிரியர்

“செத்தார் மாட்டுச் சாவாதார் வருத்த முற்றுப் புலம்பிய கையறுநிலை”

என்றதுடன் காட்டாக, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை எண்ணிமாறோக்கத்து நப்பசலையார் பாடியதைக் குறிப்பிடுகின்றார். இதில் புலவர் “வளவனின உயிரைக் கூற்று கொள்ள வேண்டும் எனில் பாடுவோரைப் போல அவன் முன் தோன்றி நின்று அவனைக் கையாற் றொழுது வாழ்த்தி உயிர் கொண்டாதல் வேண்டும்” என்று பாடுகிறார்.

தொல்காப்பியத்தைத் தொடர்ந்து பிற்காலப் புற இலக்கண நூலாகக் கருதப் பெறும் புறப்பொருள் வெண்பாமாலை கையறு நிலைத்துறையை கரந்தை மற்றும் பொதுவியல் திணைகளுக்குட்பட்ட இருவேறு துறையாக அமைத்துள்ளது. கரந்தைத் திணையில்,

“வெருவரும் வாளமர் விளிந்தோர் கண்டு
கருவி மாக்கள் கையற வுரைத்தன்று”

என்கிறது. இசைக்கருவிகளுடைய பாணர்கள் அச்சம் வருவதற்குக் காரணமான வாட்போரிலே பட்ட கரந்தை மறவனின் வீர மரணத்தைக் கண்டு, தன் செயலறுதியைக் கூறும்போது பகைவருடைய படைகளைத் துவைத்து இறுதியில் வலிமை மிக்க புலி வீழ்ந்தார்போல நிலத்திலே பட்டு வீழ்ந்த வீரனின் வீழ்ச்சியைப் பார்த்த பின்னரும் என் கண்கள் வீழ்ந்தில ஆகலின் இவை உணர்ச்சியற்ற கற்களால் ஆனவை போலும் என மொழிவது அறியத்தக்கது.

பொதுவியல் திணையின் கையறு நிலையில் அரசன் இறந்துபோக அவனுடைய குடை நிழலில் வாழ்ந்தவர் அவன் இறந்து பட்டமையைச் சொல்லி வருந்தியமையை

“செய்கழன் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர்
கையறவுரைத்துக் கைசோர்ந்தன்று”

என்கிறது. மேலும்

“கழிந்தோன் தன் புகழ் காதலித்து உரைப்பினும்
மொழிந்தனர் புலவர் அத்துறையன்ன”

என்று இறந்தவனின் புகழை விரும்பிக் கூறினும் அதனையும் புலவர் கையறு நிலைத்துறை என்று கொள்வர் என்கிறது.

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

இதனால் கரந்தைத் திணையின் கையறு நிலைத்துறை ஆநிரைப்போரில் மாய்ந்த வீரனின் இறப்பையும் பொதுவியல் துணையின் கையறு நிலைத்துறை அரசன் மற்றும் ஏனையோர் இறப்பையும் சுட்டுவதை உணரலாம்.

**முதுபாலை – தபுதாரநிலை – தாபதநிலை**

கணவன் இறந்தமைக்கு மனைவி வருந்தும் முதுபாலை, தாபதநிலை ஆகிய துறைகளும் மனைவி இறந்தமைக்கு கணவன் வருந்திப்பாடும் தபுதாரநிலை என்னும் தொல்காப்பியரின் காஞ்சித்திணையின் துறைகள் கணவன் மனைவி என்னும் குடும்ப உறவெல்லைக்குள் நிகழும் துன்ப உணர்வைவெளிப்படுத்துகின்றன. எனினும் இறப்பின் அவலத்தை எண்ணி வருந்தும் பொதுநிலையில் மேற்கண்ட துறைகள் கையறவு உரைப்பன என்றே கொள்ளலாம். இளம்பூரணர் முதுபாலை, தபுதாரநிலை, தாபத நிலை ஆகிய துறைகளுக்குப் பரணரும் (புறம்.255), தன் பெருங்கோப் பெண்டை எண்ணி சேரமான் கோட்டம் பலத்துத்

துஞ்சிய மாக்கோதையம்
(புறம்.245) ஒக்கூர் மாசாத்தனாரும்

(புறம்.248) பாடிய புறப் பாடல்களை எடுத்துக் காட்டுவார்.

தொல்காப்பியர் காஞ்சித்துறைகளாகச் சுட்டும் கையறுநிலை முதுபாலை, தபுதார நிலை, தாபதநிலை ஆகியவறறைப் புறப்பொருள் வெண்பாமாலை பொதுவியல் துறைகளாச் சுட்டும். கரந்தை வீரனின் இறப்பிற்கு வருந்திப்பாடும் கையறுநிலைப்

முனைவர் பி.கரிகாலன்
தமிழ்த்துறைத்தலைவர்
ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி
திருவானைக்கோவில், திருச்சிராப்பள்ளி – 5

பாடல்கள் புறநானூற்றில் கரந்தைத் திணையைச் சார்ந்தனவாக அமைகின்றன. புறநானூற்றுப் பாடல்கள் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கணம் தோன்றுவதற்கு அடிப்படை இலக்கியமாக அமைகின்றன.

(தொடரும்)

# அயித்தாம்புலம் குடிநீர் விநியோக திட்டத்தை அமைச்சர் டக்ளஸ் ஆரம்பித்து வைத்தார்

ஊர்காவற்றுறை அயித்தாம்புலம் கிராம முன்னேற்ற பகுதிக்கான குடிநீர் விநியோகத் திட்டத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

இக்குடிநீர் விநியோகத் திட்டமானது அம்மக்களின் கோரிக்கையின் பேரில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சி காரணமாக நடைமுறைப் படுத்தப் பட்டு கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அயித்தாம்புலம் கிராம முன்னேற்ற சங்கத்தலைவர் சண்முகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக பங்கு கொண்டதுடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் சிறிமோகனன், தீவக பொலிஸ் அத்தியட்சகர் பிரேமரட்ண, நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரி தவேந்திரன், கரம்பொன் மேற்கு கிராம உத்தியோகத்தர் பாலசுந்தரம், யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் கமல் , ஊர்காவற்றுறை பொறுப்பாளர் காந்தன் மற்றும் மாதர் சங்கத்தலைவி சித்திரா உள்ளிட்ட பெருந்தொகையான கிராம மக்கள் பங்கு கொண்டனர்.

இக்குடிநீர் விநியோக திட்டத்தின்மூலம் அயித்தாம்புலம் கிராம முன்னேற்ற முன்பள்ளி சிறார்களுக்குரிய நீண்டநாள் தேவையான குடிநீர் வழங்கலும் நிறைவேற்றப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# இலங்கை புகலிடக் கோரிக்கையாளருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வாபஸ்

(கொழும்பு)

இலங்கைப் புகலிடக் கோரிக்கை யாளருக்கு எதிராக அவுஸ்திரேலிய நீதி மன்றம் சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இது குறித்து கிறிஸ்மஸ் தீவுகளில் தங்கியிருந்த புகலிடக் கோரிக்கையாளர் கலகத்தில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப் பட்டிருந்தது.

எனினும் குறித்த எதிர்ப்பு போராட்டம் தவிர்க்க முடியாதது என பேர்த் நீதிமன்ற நீதவான் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிறிஸ்மஸ் தீவுகளில் கலகத்தில் ஈடுபட்டதாக எட்டு இலங்கைப் புகலிடக் கோரிக் கையாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருப்பதாகவும் இதில் மூன்று பேருக்கு எதிரான வழக்குகள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ-2)

# 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

18 ஆவது திருத்தச் சட்ட மூலம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் தயாராகி வருவதாக ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தல் உள்ளிட்ட சில திருத்தங்கள் விரைவில் நிறைவேற்றப்படும் எனக் குறிப்பிடப்படுகிறது.

விருப்பத் தெரிவு மற்றும் தொகுதி வாரி முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத் தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருவதாகவும் இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமை தொடர்பான திருத்தங்களுக்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளதாகவும் விரைவில் திருத்தங்கள் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

# சன் சீ கப்பலில் பயணித்த தாய் மற்றும் மூன்று குழந்தைகளுக்கு கனடா புகலிடம்

(கொழும்பு)

எம்.சீ.சன் சீ கப்பலின் ஊடாக பயணித்து கனடாவை அடைந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் குழுவைச் சேர்ந்த தாய் மற்றும் மூன்று குழந்தைகளுக்கு புகலிடம் வழங்கப் பட்டுள்ளது.

முதல் தடவையாக குறித்த கப்பலைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அடைக்கலம் வழங்கப்பட்டுள்ளதுடன் அடைக்கலம் வழங்கப்பட்ட பெண் தொடர்பான தகவல்கள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை அடைக்கலம் கோரிய மற்றுமொரு தாய் மற்றும் குழந்தைக்கு கனேடிய அதிகாரிகள் அடைக்கலம் வழங்க மறுத்துள்ளதோடு ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் திருப்தி அளிக்கவில்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கப்பலில் பயணித்த பெருமளவிலான புகலிடக் கோரிக்கையாளர்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டுக்களை சமர்ப்பித்துள்ளதாகவும் அவற்றின் உண்மைத் தன்மை குறித்து சந்தேகம் நிலவுவதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை அரசாங்க அதிகாரிகளிடையே ஊழல் மோசடி காணப்படுவதனால் இவ்வாறான ஆவணங்களைப் போலியாக பெற்றுக் கொள்வதில் சிரமமிருக்காதென அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஶ்ரீ-2)

## மேல்மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கெதிராக முறைப்பாடு

மேல் மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிராக 162 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை குறித்த உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டவையென மேல் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் எச். சுமனபால தெரிவித்தார்.

உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யாமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆணையார் குறிப்பிட்டார். தற்போது மேல்மாகாணத்தில் மாத்திரம் 48 உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# 15.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்


- 0668 - பைசண்டைன் பேரரசன் இரண்டாம் கொன்ஸ்டன்ஸ் இத்தாலியில் கொல்லப்பட்டான்.
- 1556 - புனித ரோமப் பேரரசின் முன்னாள் பேரரசன் ஐந்தாம் சார்ள்ஸ் ஸ்பெயின் திரும்பினான்.
- 1812 - நெப்போலியன் பொனபார்ட் தலைமையில் பிரெஞ்சுப் படைகள் மொஸ்கோவில் கிரெம்ளின் மாளிகையை அடைந்தனர்.
- 1821 - ஸ்பெயினிடமிருந்து கொஸ்டாரிக்கா, எல் சல்வடோர், குவாத்தமாலா, ஹொண்டுராஸ், நிக்கராகுவா ஆகியன கூட்டாக சேர்ந்து விடுதலையை அறிவித்தன.
- 1835 - சார்ள்ஸ் டார்வின் கடல் வழியே காலபாக சுத்தீவுகளுக்குச் சென்று உயிரினங்களின் படிவளர்ச்சிக் கொள்கை பற்றிய ஆய்வு களை மேற்கொண்டார்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படையினர் வேர்ஜீனியாவின் ஹார்ப்பர்ஸ் துறையைக் கைப்பற்றினர்.
- 1873 - பிரெஞ்சு-புரூசியப் போர்: கடைசி ஜெர்மனியப் படையினர் பிரான்ஸை விட்டுப் புறப்பட்டனர்.
- 1916 - முதலாம் உலகப் போர்: சோம் என்ற இடத்தில் முதற்தடவையாக தாங்கிகள் போரில் ஈடுபடுத்தப்பட்டன.
- 1935 - ஜெர்மனியில் யூதர்களுக்கு குடியுரிமை சட்டபூர்வமாக மறுக்கப் பட்டது.
- 1935 - நாசி ஜெர்மனி சுவாஸ்டிக்காவுடன் கூடிய புதிய கொடியை அறிமுகப்படுத்தியது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவில் பெரும் எண்ணிக்கையான ஜெர்மனிய வானூர்திகள் சுட்டு வீழ்த்தப்பட்டன.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: போர் தொடர்பான நிலைப்பாட்டை எடுப்பதற்காக பிராங்கிளின் ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகியோர் இரண்டாம் தடவையாக கியூபெக் நகரில் சந்தித்தனர்.
- 1945 - தெற்கு புளோரிடாவிலும் பகாமசிலும் சூறாவளி காரணமாக 366 விமானங்கள் சேதமடைந்தன.
- 1950 - கொரியப் போர்: அமெரிக்கப் படைகள் கொரியாவில் தரையிறங்கின.
- 1952 - ஐ.நா.வின் ஒப்புதலுடன் எரித்திரியா எதியோப்பியாவுடன் இணைக்கப்பட்டது.
- 1958 - நியூ ஜேர்சியில் பயணிகள் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 58 பேர் கொல்லப்பட்டனர்.
- 1959 - நிக்கிட்டா குருசேவ் ஐக்கிய அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட முதல் சோவியத் தலைவர் ஆவார்.
- 1963 - ஐக்கிய அமெரிக்காவின் பேர்மிங்ஹாமில் ஆபிரிக்க-அமெரிக்க தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 4 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.
- 1968 - சோவியத்தின் சொண்ட் 5 விண்கலம் ஏவப்பட்டது. சந்திரனைச் சுற்றி வந்து பூமியின் காற்று மண்டலத்தினுள் நுழைந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1975 - பிரெஞ்சுத் தீவான கோர்சிக்கா இரண்டு நிர்வாகப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.
- 1981 - தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
- 1987 - இந்திய அமைதிப் படைக்கெதிராக திலீபன் நீராகாரம் இன்றி உண்ணாநோன்பைத் ஆரம்பித்தார்.

### பிறப்புகள்

- 1254 - மார்க்கோ போலோ, இத்தாலிய நாடுகாண் பயணி (இ. 1324)
- 1857 - வில்லியம் டாஃப்ட், ஐக்கிய அமெரிக்காவின் 27ஆம் ஜனாதிபதி (இ. 1930)
- 1890 - அகதா கிறிஸ்டி, எழுத்தாளர் (இ. 1976)
- 1967 - ரம்யா கிருஷ்ணன், திரைப்பட நடிகை.

### இறப்புகள்

- 1950 - மறைமலை அடிகள், தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவர், (பி.1876)



**1909 - திராவிட முன்னேற்றக் கழகம் கட்சி ஸ்தாபகரும், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் - சி. என்.அண்ணாதுரை, பிறந்தநாள் (இறப்பு 1969)**

# 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் - 27.12.1923



மறைவு - 16.08.2010

## அமரர் S.V. முருகேசு

(பிரபல தொழிலதிபர் எஸ்.வி.எம். கூட்டு நிறுவனங்கள்)

இறைபதம் அடைந்த எங்கள் ஐயா!
மாதம் ஒன்று கடந்தாலும் -எங்கள்
மனதில் இருந்து உங்கள் நினைவுகள்
போகாது ஐயா!
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்களிடம் கற்றவையும்
நீங்கள் கற்பித்தவையும்-எங்களால்
மறக்க முடியாது ஐயா!

வாழ்க்கை என்றால்,
உழைப்பு மட்டுமல்ல
இறைபக்தி
சமூக சேவை
மற்றவர்களை மதித்து வாழ்வது
என்றெல்லாம் எங்களுக்கு புரியவைத்த ஐயா
நீங்கள் எங்களுடன் இல்லை என்றாலும்
நாங்கள் உங்கள்
நினைவுடன் தான் வாழ்கின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

உரிமையாளரும், ஊழியர்களும்,
எஸ்.வி. முருகேசு,
154 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல 021 222 8899

# இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினால் இளம் பத்திரிகையாளர் போட்டி

மனிதாபிமான விவகாரங்கள் தொடர்பில் பலமான குரல் எழுப்ப இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்க முயற்சிக்கும் வகையில் , வன்முறைகள் எவ்வாறு இளைஞர்களது வாழ்க்கையை பாதிக்கிறது என்பதை தெரிந்து கொள்வதற்கும் ஆயுத மோதல் தொடர்பில் அவர்களது கருத்துக்களை ஏனையவர்களிடம் பகிர்ந்து கொள்வதற்குமான வாய்ப்பை 18 வயது முதல் 25 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் உலகளாவிய ரீதியில் ''இளம் பத்திரிகையாளர்'' போட்டியை செஞ்சிலுவைச் சர்வதேச குழு (ஐ.சி.ஆர்.சி) ஆரம்பித்துள்ளது. கடந்த மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமான இளைஞர்களின் சர்வதேச வருடத்துடன் '' இளம் பத்திரிகையாளர்'' போட்டியும் ஒரே காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

''மோதல்கள் சிறுவர்கள் மற்றும் இளம் விடலைப் பருவத்தினர் மீது கற்பனை செய்யப்பட முடியாத பாதிப்புகளை ஏற்படுத்த முடியும். அதுவுமின்றி பாதிப்புகள் பற்றி வெளியுலகத்திற்கு வெளிப்படுத்துவதற்கான வழிமுறைகளும் அவர்களுக்கு குறைவாக இருப்பதுடன், அவர்கள் தமக்குள்ளளேயே மௌனமாக துன்பத்தை அனுபவித்து வேண்டியவர்களாகி விட்டனர்'' என்று சர்வதேச [illegible]டத்திற்கான ஐ.சி.ஆர்.சி பணிப்பாளர் பிளிப் ஸ்போரி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் ,

''இந்தப் போட்டியின் இலக்கு யாதெனில் , பரஸ்பரம் ஏனையவர்களது கருத்துக்கு செவிமடுத்தவும் மற்றயவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும் ஒரு தளத்தை இளைஞர்களுக்கு வழங்குதலும் அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்வதும் ஆகும். இந்தப் போட்டியானது, அவர்களால் பகிர்ந்து கொள்ளப்பட்ட எதிர்பார்ப்புகள், கருத்துகள் மற்றும் கனவுகளை வெளியே பறை சாற்றும் அதே வேளை , யுத்தத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மீது குறிப்பான கவனத்தை மேற்கொள்ளச் செய்யும் என எதிர்பார்க்கிறோம்'' என்றார்.

போட்டி ஒவ்வொன்றிலிருந்தும் நான்கு வெற்றியாளர்கள் ஆயுத மோதலினால் பாதிக்கப்பட்ட நாடுகளான ஜோர்ஜியா , லெபனான் , லிவியா அல்லது பிலிப்பைன்ஸ் என்ற நாடுகளுள் ஒன்றிற்க்கு பயணிப்பதற்கு அழைப்பு விடுக்கப்படும்.

ஆயுத மோதல்கள் அல்லது அதன் சூழமைவுகளினால் ஏற்படும் துன்பத்தினூடாக தமது வாழக்கையை நடத்தும் ஏனைய இளைளஞர்களுடன் இது குறித்து இவர்களால் அங்கு கலந்துரையாட முடியும்.

இவர்கள் ஐ.சி.ஆர்.சி பேராயத்தின் விருந்தாளிகளான இவர்களுக்கு குறிக்கப்பட்ட அந்நாட்டில் ஐ.சி.ஆர்.சி மற்றும் தேசிய செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை பார்வையிடுவதற்கும் வாய்ப்பழிக்கப்படும்.

''புதிய கலாசாரம் , அறிந்து கொள்ள, அவர்களது கருத்துக்களை முன் நிறுத்தி சவால் விட , முக்கிய தலைப்புகள் மீது கருத்தை ஏனைய இளைஞர்களுக்கு பரிமாற இது சில திறமை வாய்ந்த இளம் விடலைப் பருவத்தினருக்கு நல்ல வாய்ப்பாகும். அத்துடன் ,எதில் மாற்றம் தேவை என்பது தொடர்பில் எழுந்து நின்று தமது சொந்த வார்த்தைகளால் வெளிப்படுத்த இது ஒரு வாய்ப்புமாகும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கு தகுதி பெறுவதற்கு விண்ணப்பதாரர்கள் சிறந்த தொடர்பாடல் திறன்களைப் பெற்றிருக்க வேண்டியது கட்டாயமானது.

அவர்கள் இளைஞர் விவகாரங்களில் ஆர்வமுள்ளவர்களாகவும் மக்களது வாழ்க்கையில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய வகையில் யாதாயினும் ஒன்றைச் செய்வதற்கான விருப்பம் மற்றும் சமூக அல்லது மனிதாபிமான சேவைகளுடன் தொடர்புபட்ட தன்னார்வத் தொண்டுகளில் ஈடுபாடும் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆர்வமுடைய இளம் செய்தியாளர்கள் மனிதாபிமான சவால்கள் குறித்த தமது தெரிவு தொடர்பில் ஓர் ஆக்கத்துடன், புகைப்படத்துடனான கட்டுரை அல்லது குறும் ஒளிப்பதிவு ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். நுழைவுகள் எழுத்தாளர் தகைமை , மூலத்தன்மை மற்றும் பொருத்தப்பாடு என்பவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்படும். போட்டியாளர்கள் 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் கட்டாயமானதாகும். அவர்கள் தகுதியான கடவுச் சீட்டொன்றை கொண்டிருக்க வேண்டியதுடன் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஜனவரி அல்லது பெப்ரவரியில் பயணத்தை மேற்கொள்ளத் கூடியவராகவும் இருக்க வேண்டும். சகல தேசியங்களையும் சேர்ந்த இளம் பருவத்தினர் இதற்கு விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியாகும். வெற்றியாளர்கள் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி அறிவிக்கப்படுவார்கள்.

இதன் முழு நுழைவுத் தகவல்களுக்கும்: WWW.ICRC.org/ eng/competitionஇல் பார்வையிடலாம் என இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)


## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி பிரதேச சபையின் பணியாளர் அருணாசலம் -சிவசுதனின் அன்பு மகன் அரவிந்தின் மறைவையொட்டி ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தவரின் துயரில் பங்கு கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி பிரதேச சபை,
ஊழியர்கள்,
நலன்புரிச் சங்கம்.

(சி/1179)


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சிறுபுள்ளடி அல்லது பொறியாரை

Botanical Name - Desmodium tri florum
Family - Leguminosae
Sinh - Hin- undupiyali

இது தரையோடு தரையாக இதர புற்களோடும் பூண்டுகளோடும் சேர்ந்து முளைத்திருக்கும். அதிக தூரம் படராத இச் சிறுகொடியின் கணுக்களில் வேர்கள் தோன்றி தரையைப் பற்றிக் கொள்ளும்.

சுமார் 5 மி.மீ குறுக்களவுள்ள பெரும்பாலும் விருத்த வடிவமுள்ள சிறிய இலைகள் காம்பொன்றுக்கு மும்மூன்றாக அமைந்திருக்கும்.

இதன் சிறிய பூக்கள் ஊதா (violet) நிறமுடையன. காய் சிறிது நீண்டு தட்டையாகவும் மேல் பாகம் சொரசொரப்பாகவும் இருக்கும். கடுகை விட சிறிது பெரியதாகவுமிருக்கும். இது ஓராண்டுப் பயிராகும். இதன் பூக்களை ஆனி மாதத்திலிருந்து ஐப்பசி மாதம் வரை காணலாம்.

**பரம்பலும் , இனவிருத்தியும்:**


வெப்பமான இடங்களில் தானாக முளைத்து வளரும் தன்மை உடையது. சம வெளிகளிலும் , புல்வெளிகளிலும் திரளாக இவற்றைக் காணலாம்.

பெரிய வயல் வரப்புகள் ,நீர் நிலைகள் ஓரம் , செடிகள் நெருக்கமாகவுள்ள சிறு புதர்களின் இடுக்கு ஆகியவைகளிலும் காணலாம். இது எல்லாவகை மண்ணிலும் நன்கு பயிராகும். பொறியாரையின விதைகளைத் தூவி பயிரிடலாம்.

**மருத்துவப் பயன்கள்:**

♦ அழுத்தமான நார்போன்ற சக்கை அதிகம். சீர்த்தன்மை அதிகம் இல்லை. 20-30 கிராம் இலையின் சாற்றை எடுத்து தேனில் 20 கிராம் கலந்துண்ண சிறுநீர் நன்கு வெளியேறுவதுடன் , மாந்தம், செரியாமை, வயிற்றோட்டம் ஆகியன தீரும்.

♦ இதன் இலைச்சாறு 30 மில்லியுடன் , தேன் 15 மில்லி எடுத்து வெள்ளுள்ளிச்சாறு 20 மில்லி சேர்த்து கலந்து கொடுக்க



தாய்ப்பால் நன்கு சுரக்கும் . இதன் இலை 35 கிராம் எடுத்து 80 கிராம் சிவப்பரிசி மாவுடன் கலந்து களி அல்லது அடை தயாரித்து சாப்பிட மலச்சிக்கல் நீங்கும். உடல் வலி, வேதனை தீரும்.

♦ இதன் வேர் 35 கிராம் , மிளகு 5 கிராம், மல்லி 30 கிராம் ஆகியவை எடுத்து 4 மடங்கு நீர்விட்டு 1/8 பங்காகக் காய்ச்சி வடித்து 30 மில்லி அளவு எடுத்து காலை , மாலை ஆகிய நேரங்களாக அருந்த வாய்வுத் தொல்லை நீங்கி வயிற்றுப் பொருமல் தணியும்.

♦ இலந்தப்பட்டை, சிறுபுள்ளடி இலை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து, அரைத்த விழுதை 3 பங்கு நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்ச வேண்டும். காய்ச்சி வரும் போது அரைத்த விழுது மெழுகு பதமானதும் (கையால் உருட்டி பார்த்து) இறக்கி ஆறவிட்டு நாட்பட்ட புண்களுக்கு பூச புண்கள் விரைவில் ஆறும்.

♦ சிறுபுள்ளடி இலைகளை சேகரித்து நன்கு நிழலில் உலர்த்தி அரித்து சேமித்து வைத்துக் கொள்ளவும். இதில் ஒன்று தொடக்கம் இரண்டு கிராம் அளவும் மிளகுத் தூள் ஒன்று தொடக்கம் இரண்டு கிராம் அளவு, சிறுதுளி தேனும் கலந்து கொடுப்பதன் மூலம் விஷத்தை முறிக்கும் நிலையேற்படும்.

♦ இதன் வேர்களை சேகரித்து நன்றாக சிதைத்து சாறுபிழிந்து ஆறாத கட்டிகள் மேல் பூச கட்டிகள் விரைவில் ஆறும்.

♦ இதன் இலைகளை அரைத்து 5 கிராம் அளவு பசும்பால் 30 மில்லியில் கலந்தெடுக்க சிறுநீர் நன்கு வெளியாகி பசியின்மை, செரியாமை ஆகியனவும் நீக்கி உடலில் காணப்படும் வலியும் நீங்கும்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம், கைதடி.**

♦ சிறுபுள்ளடி வேர், சாரணைவேர் மற்றும் வேர்க்கொம்பு (சுக்கு) ஆகியவற்றை சம அளவாக எடுத்து இடித்து போதியளவு நீர் விட்டு 1/4 பங்காகச் சுண்டக்காய்ச்சி வேளைக்கு 2 தேக்கரண்டி வீதம் 3 வேளை கொடுக்க குழந்தைகட்கு ஏற்படும் மாந்தப் போக்கு நீங்கி குழந்தை நலம் பெறும்.

♦ இதன் வேர்களையும் இலையையும் அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து மோரில் கலக்கி 2 வேளை 40 நாட்கள் கொடுத்து வர தாய்ப்பால் நன்கு சுரக்கும்.

# சாதாரண தர மாணவர்களுக்கான அடையாள அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை விநியோகிக்கும் நடவடிக்கைகள் தற்சமயம் இடம்பெறுவதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஜெகத் விஜய வீர தெரிவித்துள்ளார்.

பரீட்சையில் தோற்றுவதற்கு அடையாள அட்டை மிகவும் அவசியமான தொன்றாகும். இதற் கமைய 16 வயது பூர்த்தியடைந்த சகல மாணவர்களும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பது அவசியமாகும். இவற்றை திணைக்களத்திற்கு விரைவில் அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய இறுதித் திகதி வரை காத்திராமல் விண்ணப்பங்களை முன்கூட்டி அனுப்பி வைக்குமாறு ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் அதிபர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். வருடாந்தம் இடம் பெறு கின்ற தாமதத்தைத்தவிர்ப்பதற்கு ஒத்துழைக் குமாறு அவர் பாடசாலை அதிபர்களை கோரியுள்ளார்.

(ஸ்ரீ-7)

# இலங்கை அகதிகளை அழைத்துச் சென்ற படகோட்டிகளை விடுதலை செய்யவும்

## ஆஸியிடம் இந்தோனேசியா கோரிக்கை

இலங்கை அகதிகளை அவுஸ்திரேலியாவிற்கு கடல் மார்க்கமாக அழைத்துச் சென்றதாக கூறப்படும் இந்தோனேசிய பட கோட்டிகளை விடுதலை செய்யுமாறு இந்தோனேசியா கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சு இந்தக் கோரிக்கையை ஜகார்த்தாவிலுள்ள அவுஸ்திரேலிய தூதரகத்திடம் முன்வைத்துள்ளது.

சட்டவிரோத குடியேறிகளை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் சென்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இதுவரை 222 இந்தோனேசிய படகோட்டிகள் அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

தரவுகளின் படி அவுஸ்திரேலியாவுக்குள் கடந்த வருடம் 2 ஆயிரத்து 504 பேர் படகு மூலம் பயணித்துள்ளார்கள். எனினும் 2008 ஆம் ஆண்டு 369 பேர் மாத்திரமே அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்துள்ளனர். என குறிப்பிடப்படு கிறது.

(ஸ்ரீ-4)


# சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்

## Kids Park Pre School & day Care Center



அநேக வேலை செய்யும் தாய்-தந்தையர்களின் வேண்டுகோளுக் கிணங்க! எம் நிபுணத்துவ சேவையை முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் வழங்கி வருகின்றோம்!! (காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை)

☞ சிறார்களுக்கும் குழந்தைகளுக்கும் மிகப்பாதுகாப்பான சூழல் 2+ Play Group -3+ Montessori 3+ Pre-School என்ற வகையில் உலகத் தரம் வாய்ந்த ஆங்கில-தாய் மொழி மூல பயில்வுகள்; விளையாட்டு, ஆடல், பாடல் செயற்பாடுகள்

☞ ஆரம்பக்கல்வி பயிலும் பாடசாலைச் சிறார்கள் 12.30 தொடக்கம் 5 மணிவரையும் விளையாடி, மகிழ்வாகக் கற்று உறங்கி நல்வாழ்வு வாழ...

☞ களிமண் பிசைவிலிருந்து கணனிக் கற்கைவரை- பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் அரவணைப்பு - அர்ப்பணிப்பு 2011 ஆம் ஆண்டுக்கு வரையறுக்கப்பட்ட இடங்களே உண்டு.

☞ ஒக்டோபர் 15 இற்கு முன் விண்ணப்பிக்கவும். ஒக்டோபர் 17 விஜயதசமி நாளில் ஏடு தொடக்கலுடன் ஆரம்பம்.

பா.தனபாலன்-பணிப்பாளர்
( M.Phil in pre school Education)

சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்,
528,பலாலி வீதி,
திருநெல்வேலி.
தொடர்புகளுக்கு:0779360607

(2469)

குழந்தைகள் பராமரிப்பில்
அர்ப்பணிப்பும் - ஆர்வமும் உள்ளவர்கள் பணிநிலைக்கு விண்ணப்பிக்க முடியும்.


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,இலங்கை

## விஞ்ஞான பீடம்

## அறிவித்தல்

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான 2009 /2010 கல்வியாண்டிற்கான கல்விச் செயற்பாடுகள் 27.09.2010ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும். அன்று காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிமுக நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏனைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 11.10.2010ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.விசேட பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பும் 3ஆம் வருட மாணவர்கள் அதற்கான விண்ணப்பத்தை 04.10.2010 ஆம் திகதிக்கு முன் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
14.09.2010

(சி/1180)

# மக்களின் மனமறிந்த மக்கள் வங்கியினால் வழங்கப்பட்ட வடக்கின் வசந்தம் கடன்களை பயனாளிகளுக்கு கையளிக்கும் மாபெரும் விழா



கௌரவ திருமிகு.டக்ளஸ் தேவானந்தா (பாரம்பரிய, சிறு கைத்தொழில் அமைச்சர்) அவர்கள் வழங்கவுள்ளார்கள்.

காலம் :- 16.09.2010 வியாழக்கிழமை பி.ப 3.30

இடம்:- சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கமுன்றலில் (எதிர்பாராத விதமாக மழை வந்தால் 100 வீட்டு திட்ட பாலர் பாடசாலையில் நடைபெறும்)

**கடற்றொழில் அபிவிருத்திக்கு 1 இலட்சம் வீதம் வழங்கப்படவுள்ளது.**

பங்குபற்றுவோர்:-

*திரு. இ.சிறிதரன்*
*மாகாண முகாமையாளர்,*
*இலங்கை மத்திய வங்கி.*

*திருமதி. இமெல்டா சுகுமார்*
*அரசாங்க அதிபர்,*
*யாழ். மாவட்டம்.*

*திரு.S.பற்பநாதன்(R.M)*
*மாவட்ட முகாமையாளர்,*
*மக்கள் வங்கி,*
*யாழ்ப்பாணம்.*

*திரு. அன்ரன் யோகநாயகம்*
*வலி தென்மேற்கு பிரதேசசபை,*
*சண்டிலிப்பாய்.*

*திரு.S.நித்தியானந்தன்*
*முகாமையாளர்,*
*மக்கள் வங்கி,*
*ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.*

*திரு.T.அருந்தவநாதன்*
*உதவி ஆணையாளர்,*
*கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்.*

*யோ. பற்குணராசா*
*முதல்வர்,*
*யாழ். மாநகர சபை.*

*திரு.K.தர்மலிங்கம்*
*உதவிப்பணிப்பாளர்,*
*கடற்றொழில் நீரியல் வளத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

*திரு. கே. சுசீந்திரன்(ARM)*
*மாவட்ட உதவிமுகாமையாளர்,*
*மக்கள் வங்கி.*

*திரு. பு.சிவலிங்கம்*
*பிரலதேசசபை வலி.தென்மேற்கு,*
*மானிப்பாய்.*

*அன்ரன் ஜோன்சன்*
*முன்னாள் முதல்வர்,*
*வலி. தென்மேற்கு,*
*பிரதேசபை ,மானிப்பாய்.*

*இ.ரவீந்திரன்*
*மாவட்ட கடற்றொழில் பரிசோதகர்,*
*யாழ்ப்பாணம்.*

*ப. ஜெயசீலன்*
*கடற்றொழில் பரிசோதகர்,*
*சண்டிலிப்பாய்.*

*திரு.V.சந்திரராசா*
*கிராமசேவையாளர்,*
*J/131 சாவல் கட்டு.*

அனைவரையும் இதில் பங்கு பற்றும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

அடிமை விலங்குகளை அறுத்து சுதந்திரமாக முன்னேறுவதற்கு இத்திட்டத்தை வழங்கிய கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் மக்கள் வங்கிக்கும் எமது நன்றிகளைத் தெரியப்படுத்துகிறோம்.

மீன்களை கூறும் போது முதலில் அள்ளுவதும் விற்றபின்பு மீன்களை அள்ளுவதும் ஆயிரத்திற்கு 150 தரகு எடுப்பதும் சங்கத்தில் நடைபெற மாட்டாது என்பதை தெரியப்படுத்துகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சாவற்கட்டு கடற்றொழிலாளர்
கூட்டுறவுச்சங்கம்,
ஆனைக்கோட்டை.

(2466)

சாத்தான் நேரில் செல்லமுடியாத இடங்களுக்கு மதுவை அனுப்பி வைக்கிறான்.

– யூதப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# போர்க் கால இழப்புப்போல நடக்கும் விபத்து மரணம்

விபத்துக்கள் பற்றி ஏற்கெனவே இவ்விடத்தில் பல தடவைகள் எழுதியிருந்தோம். நாம் அதை எழுதியபோது விபத்துக்களின் தொகை மிகக் குறைவாக இருந்தது.

ஏ–9 பாதை பூட்டப்பட்டிருந்ததன் விளைவாக யாழ்.குடாநாட்டில் வாகனங்களின் தொகை மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தமையால் விபத்துக்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவு என்ற நிலையைக் காட்டியது.

ஆனால் ஏ–9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் வாகனங்களின் எண்ணிக்கை மெல்ல மெல்ல அதிகரித்த வேளை விபத்துக்கள் குறித்த எச்சரிக்கையை இவ்விடத்தில் விடுத்திருந்தோம்.

என்ன செய்வது! எதை எழுதினாலும் அதைப் பற்றி கவலையில்லை எனும் மனநிலை கொண்டவர்கள் இருக்கும்போது விபத்துக்களை தவிர்ப்பது கடினமே. இதற்கு மேலாக வாகனங்கள் தொடர்பில் கண்காணிக்கும் பொலிஸாரில் சிலர் உழைப்பை மையமாக வைத்தே தங்கள் பணியில் ஈடுபடுகின்றனர்.

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணிப்பவரை பொலிஸார் இடைமறிக்கின்றனர்.

தலைக்கவசம் அணியாமல் செல்வது உயிராபத்தானது. எனவே தலைக்கவசம் அணிவதை கட்டாயம் நடைமுறைப்படுத்தவேண்டும் எனக் கருதும் பொலிஸார் உடனடியாகவே தமது புத்தகத்தில் மேற்படி சம்பவத்தை பதிவு செய்கிறார்.

அதே நேரம் சில பொலிஸாரின் எதிர்பார்ப்பு வேறாக இருக்கிறது. இங்குதான் தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவம் இழந்து போகின்றது.

எனவே வாகன விபத்துக்கள் அதனால் ஏற்படும் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட வேண்டுமாயின் பொலிஸாரின் பணி முக்கியமானதாக அமையும்.

இதற்கு மேலாக பேருந்து சேவை நடத்தும் தனியார் மினிபஸ்களின் சாரதிகள் சிலரின் பொறுப்பற்ற தன்மையால் ஏற்படும் விபத்து மரணங்கள் வேதனைக்குரியவை.

இது தொடர்பில் தனியார் மினிபஸ் சங்கங்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் ஆளுகையுடன் செயற்படுமாக இருந்தால், இந்தத் துயரத்துக்கு முடிபுகட்ட முடியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் வேகங்கள் எல்லை மீறிச் செல்வதன் விளைவு போர்க் காலத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் எண்ணிக்கையில் வாகன விபத்துக்கள், மரணத்தைத் தருகின்றன.

நினைக்கவே நெஞ்சம் துணுக்குறும் அளவிற்கு மிகச் சர்வ சாதாரணமாக இடம்பெறும் விபத்து மரணங்களை தடுக்க, நாம் அனைவரும் வீதி ஒழுங்கு முறையை பின்பற்றவும் – பாதசாரிகளின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கவும் பழகிக்கொள்வோம்.

# கிளிநொச்சி நாகேந்திரபுரம் கிராம மக்களுடன் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. கலந்துரையாடல்

கிளிநொச்சி புளியம்பொக்கணையில் உள்ள நாகேந்திரபுரம் கிராமப்பகுதிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மேற்படி விஜயத்தின் போது அக்கிராமத்தின் மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பெண்களை சந்தித்து கலந்துரையாடினர்.

அத்துடன் அக்கிராமத்தில் போரினால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த தாய் தந்தையை இழந்த மற்றும் தனித்து வாழும் பெண்கள் என 45 குடும்பங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உடுபுடைவை பொதிகளை வழங்கியுள்ளார்.

இதன் போது கருத்துத்தெரிவித்த கிராம மக்கள் ,மீள் குடியேற்றத்திற்கென நாம் சென்றபோது தம்மிடம் காணிகளுக்கான உரிமைப் பத்திரங்கள் இல்லாமை என்ற காரணத்தினால் தமக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் ஏதுவும் எடுக்கப்படவில்லை என்று கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் நாகேந்திரபுரம் பாடசாலையில் எண்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதே வேளை அதே கிராமத்தில் உள்ள முன்பள்ளியில் 30 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றதுடன் அவர்களுக்கு கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு இதுவரை எந்தத் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை எனவும் முன்பள்ளி சீரமைக்கப்படாமையால் சிறார்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் மழலைகள் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஆண்டுக்கான கொடுப்பனவினை வழங்குவதற்கான ஏற்பாட்டினை தான் மேற்கொள்வதாகவும் முன்பள்ளியினை புனரமைப்பதற்கான நிதியுதவியினை வழங்குவதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ–2)

# கனேடிய தமிழ்க் காங்கிரஸ் அலுவலகத்தில் திருடப்பட்ட கணனிகளில் அகதிகளின் பதிவுகளில்லை

## டேவிட் பூபாலபிள்ளை தெரிவிப்பு

(கொழும்பு)

கனேடிய தமிழ் காங்கிரஸின் காரியாலயத்திலிருந்து திருடப்பட்ட கணனியில் சன்.சீ கப்பல் அகதிகளின் பெயர்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் காங்கிரஸின் பேச்சாளர் டேவிட் பூபாலபிள்ளை இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

காங்கிரஸின் காரியாலயம் கடந்த சனிக்கிழமை உடைக்கப்பட்டு சன்.சீ கப்பலில் வந்த 492 அகதிகளின் ஆவணக் கணனி களவாடப்பட்டது.

அதில் அகதிகளின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் அதில் பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கனடாவிற்கான இலங்கை இராஜதந்திர தரப்பு சன்.சீ கப்பல் கனடாவிற்கு வருவதற்கு முன்னரே எச்சரிக்கை விடுத்திருந்தது. என்னும் அதனை கனேடிய அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லை யென கனேடிய அரசியல்வாதி ஒருவர் குற்றம்சாட்டியுள்ளார். (ஸ்ரீ–4)

# இலங்கை யுவதிகளை சிங்கப்பூரில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியவர் கைது

(கொழும்பு)

இலங்கை யுவதிகளை சிங்கப்பூரில் பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அழகுக் கலைத்துறையில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதாக தெரிவித்து இந்த யுவதிகள் சிங்கப்பூரிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

கட்டுநாயக்க பகுதியில் இந்த சந்தேக நபர் நேற்று முன்தினம் இரவு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே இந்த நடவடிக்கையுடன் தொடர்புடைய 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூரில் உள்ள அழகுக்கலை நிலையமொன்றில் ஒன்றரை இலட்சம் ரூபா சம்பளத்துக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக சீதுவை பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவரை சந்தேக நபர் அழைத்துச் சென்றுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

எனினும் அங்கு அவர் பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

சிங்கப்பூரில் இருந்து தப்பி வந்த குறிப்பிட்ட யுவதி குற்றப்புலனாய்வு திணைக்களத் திடம் செய்த முறைப் பாட்டிற்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஸ்ரீ–4)

# மோ. சைக்கிள் விபத்து இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அரியாலைச் சந்திப்பகுதியில் காரும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் நேற்று மதியம் 12.00 மணியளவில் இடம்பெற்றது.

இவ்விபத்துச் சம்பவத்தில் கரம்பன் குறிச்சி வரணியைச் சேர்ந்த ஆர். கிருபாகரன் (வயது 31) என்பவரே படுகாய மடைந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்றுகொண்டிருந்த இவரது மோட்டார் சைக்கிள் எதிரே வந்த காருடன் மோதியதாக பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச–2,6,54)

# நினைவுகூரல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அறக்கட்டளை நிதியம், இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், யாழ். ஆய்வறிவாளர் அணியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும் சிறந்த கல்விச் சிந்தனையாளருமாகிய கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் மறைவின் 33 ஆவது வருட நினைவு கூரல் நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். பிரதம தபாலகத்திற்கு அருகில் அமைந்துள்ள யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் வழக்கறிஞர் ரெங்கன் தேவராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் நினைவுரையை வழக்கறிஞர் எஸ். ஜி.புஞ்சிகேவா, யாழ். மாநகர முன்னாள் துணை முதல்வர் எம்.ஜி.பசீர், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனப் பணிப்பாளர் கலாநிதி செல்வி திருச்சந்திரன், இளைப்பாறிய ஆசிரியர் வீ. சின்னத்தம்பி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ–4)

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



என்றென்றும் நான் உனக்கு உரியவன். இனி நான் எது செய்தாலும் அது நீ செய்வதே ஆகும். ‘‘நான், எனது’’ என்பனவெல்லாம் எள்ளளவும் என்னிடம் இல்லை.

கண்ணாடி மீது படிந்துள்ள அழுக்கைத் துடைத்து விடு. உன் மனத்தை தூய தாக்கிக்கொள். நீயே பிரம்மம் என்பதை ஒரு நொடியில் அறிவாய்.

யாரையும் தீயவன் என்று சொல்லாதே. ‘‘நீ நல்லவன், இன்னும் நல்லவனாக இரு,’’ என்று சொல்.பொறுமை இல்லாதவன் ஒரு போதும் வெற்றி பெறமாட்டான்.

# காஷ்மீரில் வன்முறைக்கு 14 பேர் பலி ; டில்லியில் முதல்வர் ஓமர் அவசர ஆலோசனை

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் நேற்று முன்தினம் மீண்டும் ஏற்பட்ட வன்முறையில் 14 பேர் கொல்லப் பட்டனர். 70 க்கும் மேற்பட்டோர் காயம் அடைந் தனர். அம்மாநிலம் பற்றி எரிந்து கொண்டி ருக்கிறது.

காஷ்மீரில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக வன்முறை நிலவுகிறது. இதனால் ஸ்ரீ நகர் உட்பட பல பகுதிகளில் ஊரடங்கு உத் தரவு அமுல்படுத்தப்பட்டது. ரம்ழான் பண்டி கையை முன்னிட்டு இந்த ஊரடங்கு உத்த ரவு தளர்த்தப்பட்டது. இந்நிலையில் ஸ்ரீநக ரில் உள்ள ஹஸ்ரத்பால் மசூதியில் கடந்த 11ஆம் திகதி நடந்த தொழுகையில் பங்கேற்ற வர்களில் ஒரு பிரிவினர் வன்முறையில் இறங்கினர்.

இதனால் அரசு அலுவலகங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. பொலிஸ் குற்றப்பிரிவு அலுவலகம் சூறையாடப்பட்டது. மேலும் அனந்தநாக் மாவட்டத்தில் உள்ள காஷ்மீர் மாநிலக் கல்வி அமைச்சர் பீர்ஜதா முகமது சயீது வீட்டிலும் கலவரக்காரர்கள் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து ஸ்ரீ நகர் உட்பட பல நகரங்களில் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டது.

புனித நூலான குர்-ஆன் அமெரிக்கா வில் அவமதிக்கப்பட்டதாக வதந்தி கிளம்பி யதை அடுத்து பாரமுல்லா மாவட்டத்தில் டேங்க் மார்க் என்ற இடத்தில் ஒரு பிரிவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பின்னர் அவர்கள் தனியார் பள்ளி ஒன்றுக்கு தீ வைத்தனர். இதன் பின் வட்டார வளர்ச்சி அலுவலகம், நீதி



மன்ற வளாகம் ,தாசில்தார் அலுவலக வாக னங்கள், சமூக நல அலுவலகம் ,சுற்றுலா துறை குடியிருப்புக்களுக்கும் தீ வைத்தனர். பொலிஸ் நிலையம் ஒன்றை தாக்கிய கும்பல் அதைசூறையாடவும் முற்பட்டது. இதைய டுத்து பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 20 பேர் காயமடைந்தனர்; ஐந்து பேர் பலியாயினர்.

பத்காமில் நடந்த வன்முறையில் ஒரு பொலிஸ்காரர் உட்பட இரண்டு பேர் கொல்லப் பட்டனர். இது தவிர மற்ற பகுதிகளில் நடந்த வன்முறையில் மேலும் ஏழுபேர் பலியாகினர். பத்காம் மாவட்டத்தில் மாச்சவ் மற்றும் கோகா ஹம்கமா மற்றும் ஸ்ரீநகரின் சப்ஸி மண்டி உட்பட பல இடங்களில் வன்முறை நிகழ்ந் தது. மக்கள் உணர்வுகளை பாதிக்கும் செய்தி களை ஒளிபரப்பிய சர்வதேச செய்தி அலை வரிசைகளுக்கும் காஷ்மீர் மாநில அரசு தடை விதித்தது. அதேபோல் பிரஸ் தொலைக் காட்சி ஒளிபரப்பும் தடை செய்யப்பட்டது. அத் துடன் சில பத்திரிகைகளும் செயற்படவில்லை.

இதற்கிடையில் காங். தலைவர் சோனியா மற்றும் உள்துறை அமைச்சர் சிதம்பரத்தை காஷ்மீர் முதல்வர் ஓமர் அப்துல்லா நேற்று முன்தினம் காலை டில்லியில் சந்தித்துப் பேசி னார்கள். அப்போது ஆயுதப்படை சிறப்பு அதி கார சட்டத்தை பாதி அளவு என்றாலும் வாபஸ் பெற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அப்படிச் செய்தால் அது நம்பிக்கையை மேம்படுத்தும் நடவடிக்கையாக அமையும் என்றும் வலியுறுத்தினார். காஷ்மீரில் ஓமர் முதல்வராக நீடிக்க காங்கிரஸ் தலைவர் சோனியா ஆதரவு அளிப்பதாகக் கூறப்பட் டது. ஆயுதப் படை சிறப்பு அதிகார சட்டத்தை இரத்து செய்யும் விவகாரத்தில் உள்துறை அசைமச்சகம் பெரிய அளவில் அக்கறை காட்டவில்லை என்றாலும் அதை இரத்து செய்யக் கூடாது என இராணுவ அமைச்சகம் வலியுறுத்தி வருகிறது.

மேலும் நேற்று முன்தினம் இராணுவ கமாண்டர்கள் கூட்டத்தில் பேசிய பிரதமர் மன்மோகன் காஷ்மீர் நிலைமை குறித்து பெரும் கவலை தெரி வித்தார்.

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இன்று அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெறவுள்ளது. பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நேற்று முன்தினம் நடந்த பாதுகாப்பு தொடர் பான அமைச்சரவை குழு கூட்டத்தில் இந்த முடிபு எடுக்கப்பட்டது.

ஆயுதப்படை சிறப்பு அதிகார சட்டத்தை இரத்து செய்வது காஷ்மீரில் உள்ள பல்வேறு பிரிவினருடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.காஷ்மீர் பிரச் சினைக்கு நம்பகமான. நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வுக்காண பேச்சுவார்த்தையே உகந்தது என கூட்டத்தில் முடிபு செய்யப்பட்டது.

(ஸ்ரீ-2)

# பரீட்சை முறைகேட்டில் ஈடுபட்ட ஆசிரியர்கள் குறித்து விசாரணை

(கொழும்பு)

கல்விப் பொது தராதாப் பரீட்சையின் போது முறைகேடுகளில் ஈடுபட்ட ஆசிரியர் கள் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிக் கவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறி வித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தின் விசார ணைப்பிரிவு ஆணையாளரினால் இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பரீட்சை வினாத்தாள் அடங்கிய பொதி களைச் சோதனையிட்டு எவ்வாறு முறைகேடு கள் இடம்பெற்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இந்த விசாரணைகள் நிறைவடைந்ததும் முறைகேடுகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கைகளை மேற் கொள்வது என்பதைத் தீர்மானிப்பதாக ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட் சையின் போது பதிவான முறைகேடுகள் தொடர் பிலும் பரீட்சைகள் திணைக்களம் விசாரணை களை ஆரம்பிக்கவுள்ளது.

(ஸ்ரீ-2)

# இலங்கையைச் சூழ கடற்படை முகாம்களை அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் கடற் படை முகாம்களை அமைப்பதற்குப் பாது காப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலை தூக்குவதைத் தடுக்கும் வகையில் எதிர்காலப் பாதுகாப்புத் திட்டத்திற்கு அமைய இந்த முகாம்கள் அமைக்கப்படுவதாகக் கடற் படைப் பேச்சாளர் கப்டன் அத்துல செனரத் தெரிவித் துள்ளார்.

நாட்டிற்குள் பயங்கரவாதத்துடன் தொடர் புடையவர்கள் பிரவேசிப்பதைத் தடுப்பதற் கான முக்கிய பொறுப்பு கடற்படையைச் சார்ந் துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடல் எல்லை மற்றும் கடற்பரப்பைப் பாது காக்கும் பொறுப்பும் கடற்படைக்கு உள்ள தாகக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள் ளார்.

கடற்படை முகாம்களை அமைக்கும் போது வடக்குக் கிழக்குக் கடற்பிரதேசம் குறித்து முக்கிய கவனம் செலுத்தப் படுமென வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக வடமேல் கடற் பிர தேசத்தில் முள்ளிக்குளம் பகுதியில் முதலா வது முகாம் அமைக்கப்பட்டதாகவும் அத னைப் பாதுகாப்புச் செயலாளர் அண்மை யில் திறந்து வைத்ததாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களச் செய்தியறிக்கை கூறு கிறது.

(ஸ்ரீ-2-4)

# கிளிநொச்சியில் மேலுமொரு தொகுதி மக்கள் மீள்குடியேற்றம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் ஒரு தொகுதி மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதற்கமைய வவுனியா மெனிக்பாம் நிவா ரண நிலையத்தில் தங்கியிருந்த 237 குடும் பங்களைச் சேர்ந்த 868 பேர் மீள் குடியேற் றத்துக்காக நேற்று அழைத்துச் செல்லப் பட்டதாக கிளிநொச்சி மாவட்ட மீள் குடியேற் றத் திட்டப்பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் தெரி வித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரி வுக்குட்பட்ட இயக்கச்சி, கோவில் வயல் மற் றும் முகாவில் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு மீள் குடியேற்றத்திற்காக அழைத்துச் செல்லப்பட் டுள்ளார்கள்.

இந்தப் பிரதேச செயலகப் பிரிவில் ஆயி ரத்து 633 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயி ரத்து 279 பேர் இதுவரை மீள் குடியமர்த் தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மீள் குடியேற்றத் திட்டப்பணிப்பாளர் தெரிவித் தார்.

(ஸ்ரீ-2)

# இலங்கை இந்தியக் கடலெல்லையில் 13 அகதிகள் கடற்படையினரால் மீட்பு

இலங்கை இந்தியக் கடல் எல்லையி லிருந்து 13 அகதிகளைக் கடற்படையினர் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராமர் பாலத்திற்கு அருகாமையிலுள்ள சிறிய தீவொன்றில் இருந்த இவர்களைக் கடற்படையின்ர் மன்னாருக்கு அழைத்துச் சென்று மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்த தாகக் கடற்படைப் பேச்சாளர் கப்டன் அத்துல செனரத் தெரிவித்தார்.

இவர்கள் மீன்பிடிப் படகொன்றில் இந்தி யாவிலிருந்து இலங்கை நோக்கி வந்துள்ள தாகக் கடற்படையினர் குறிப்பிட் டுள்ளனர்.

மேலும் யுத்தம் நிலவிய காலத்தில் இவர் கள் இலங்கையிலிருந்து அகதிகளாக இந் தியா சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இதற்கமைய மன்னார் பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டுள்ள னர்.

(ஸ்ரீ-2-4)


பாராட்டி நன்றி தெரிவிக்கின்றோம்



கே.என்.டக்ளஸ் தேவானந்தா (பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் அமைச்சர்)



சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன் தோழர்)



கமல் தோழர் (யாழ்.மாவட்ட அமைப்பாளர்)



போல் தோழர் (வேலணைபகுதிப் பொறுப்பாளர்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் அமைச்சருமான கௌரவ உயர் திரு கே.என். டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்ற உறுப்பினர் அவர் களால் எமது வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கிய முச்சக்கர வண்டி (ஆட்டோ) 02.08.2010ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின்(உதயன் தோழர்) அவர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் திரு கமல் தோழர் அவர்களும், எமது பகுதிப் பொறுப் பாளர் போல் தோழர் அவர்களும், எம்மிடம் கையளித்தனர். இவர் களது சேவை தொடர்ந்தும் கிடைக்கவேண்டுமென பிரார்த்திப்பதுடன் இவர்களை வாழ்த்தி நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.


தலைவர்,பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்

வேலணை.பல நோக்கு கூட்டுறவுசங்கம்,
வேலணை.

(2464)

## வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம்

# சுதர்சன், பாலேந்திரா இணைப்பாட்டம் யாழ்.சென்றல் அணி அரையிறுதிக்குத் தெரிவு



யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 7-வது ஆண்டாக நடத்தி வரும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் 2-வது காலிறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ்.சென்றல் கழக அணி, கிருஸ்கொப்பர்ஸ் கழக அணியை 222 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 50 ஓவர்களில் 359 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களையிழந்தது. 92 ஓட்டங்களைப் பெற்ற சுதர்ஷனும் 78 ஓட்டங்களைப் பெற்ற பாலேந்திராவும் இணைப்பாட்டமாக 118 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சுபாதீஸ் ஆட்டமிழக்காது 21 ஓட்டங்களும் சிவசங்கர் 27 ஓட்டங்களும் சசிகாந் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

ரவிசங்கர் 3 இலக்குகளையும் சிவதாஸ் 2 இலக்குகளையும் முகுந்தன், டிலக்ஷன் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

360 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கிருஸ்கொப்பர்ஸ் கழக அணி 29.1 ஓவர்களில் சகல இலக்குகளையுமிழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.



கயதீபன் 33, பிரகலாதன் 17, காந்தசீலன் 16 ஓட்டங்களையும் பெற்றனர். ஜெசிந்தன், சுபாதீஸ் தலா மூன்று இலக்குகளையும் விமலகாந்தன் இரண்டு இலக்கினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.சென்றல் கழக அணி எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் அரையிறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் கழக அணியுடன் மோதுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் வெற்றி பெறும் அணி ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக அணியுடன் இறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# இ.போ.ச. சாரதி மற்றும் காப்பாளர் பதவிக்கு இன்று நியமனம் வழங்கல்

## 25 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் சாரதி மற்றும் காப்பாளர் நியமனம் வழங்குதல் தொடர்பான நேர்முகத் தேர்வுகளுக்கு 25 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவர்களை இன்று காலை கோண்டாவில் தலைமை காரியாலயத்திற்கு சமுகந்தருமாறு சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

சாரதி பதவிக்குப் பத்துப் பேருக்கும் காப்பாளர் பதவிக்கு பதினைந்து பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அழைக்கப்பட்டவர்களின் விபரம் வருமாறு,

சாரதி

வேலும்மயிலும் ரமேஷ், செல்லத்துரை மணிவண்ணன், நாகரட்ணம் சசிக்குமார், கிருஷ்ணசாமி சயந்தராஜன், குணரட்ணம் றொபேட், சின்னையா சுதாகரன், உருத்திரநாதன் இளங்கோ, பரராஜசிங்கம் குணரட்ணம், வேலுப்பிள்ளை ஜெகன்மோகன், ஆராய்ச்சிலாகோ றஞ்சித்திசநாயக்க.

காப்பாளர்

குணானந்தன் கஜீவன், சச்சிதானந்தன் நவநீதன், இரட்ணம் புவிதரன், இராஜதுரை பகீரதன், வடிவேல் தவசீலன், அத்துப் கபூர் ஜெஸ்மல், லில்லிகுமார் பிரசாத், பாலிபோட் வினோதரன்,

தேவநாயகம் தயாபரன், தவராஜா பிரபாகரன், மகாலிங்கம் பார்த்தீபன், வீரராஜா கிரிதரன், இராஜேந்திரன் நிருபன், பசுபதி சிறி விக்னேஸ்வரராஜா, யோகராஜா கமலதாசன். (சு)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை-கலைப்பீடம்

### ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்

இதழியல் டிப்ளோமா (பகுதிநேரம்-இரண்டு வருடங்கள்)

### கல்வியாண்டு-2010/2012

பகுதிநேர இதழியல் டிப்ளோமா கற்கை நெறியினை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் கற்க விரும்பும் ஊடகவியலாளராக பணிபுரிவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:-

க.பொ.த. (சா.த) தேர்வில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி ஊடாக ஆறுபாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அரசு ஊடகத்தில் அல்லது மின்னியல் ஊடகத்தில் ஓராண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணிபுரியும் ஊடக நிறுவனத்திலிருந்து இக்கற்கை நெறியிற் சேர்வதற்கான அனுமதிக் கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.

அனுமதிக்கான தெரிவு முறை : நேர்முகத்தேர்வு

கற்கை நெறிக்காலம்: 2 ஆண்டுகள் விரிவுரைகள் சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் (தேவைப்படின் அரச விடுமுறை நாட்களிலும்) நடைபெறும்.

கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கற்கை நெறிக்கட்டணம் | ரூபா | 20000.00 |
| பதிவுக்கட்டணம் | ரூபா | 750.00 |
| நூலக வைப்புப்பணம் | ரூபா | 750.00 |
| நூலக பயன்பாடு | ரூபா | 1000.00 |
| மொத்தம் | ரூபாய் | 22500.00 |

விண்ணப்பப் படிவங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் ரூபா 100 செலுத்திப் பெற்ற பற்றுச் சீட்டினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அனுமதிகள் கிளை அலுவலகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபாலிலோ நேரிலோ உதவிப்பதிவாளர் அனுமதிகள் கிளை யாழ். பல்கலைக்கழகம் திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி - 08.10.2010

- பதிவாளர் (சி/1181) 14.09.2010


## தேசிய மட்ட உதைபந்...

பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணி சம்பியனாகி வரலாறு படைத்தது.

அத்துடன் 19 வயதுப்பிரிவுப் போட்டியில் பலம் வாய்ந்த அணிகளை எதிர்கொண்ட மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மூன்றாம் இடத்தைப் பிடித்து சாதித்தது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில், உடற் பயிற்சிப் போட்டியில் சம்பியனான இளவாலை ஹென் றியரசர் கல்லூரி, இரண்டாம் இடத்தைப் பிடித்த ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் கல்லூரி மற்றும் உடற்பயிற்சி பெண்கள் பிரிவில் மூன்றாமிடத்தில் தெரிவான வவுனியா ரம்பைக்குளம் கொன்வன்ற் கல்லூரி, நான்காமிடத்தைப் பெற்ற இளவாலை கொன்வன்ற் கல்லூரி, ஐந்தா மிடத்தைப் பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி மற்றும் உதைபந்தாட்டத்தில் சாதித்து சம்பியனான மன்னார்சென்.சேவியர் ஆண்கள்பாடசாலை, மூன்றாமிடத்தை பிடித்த மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஆகிய பாடசாலைகளின் வீர வீராங் கனைகளுக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் ஆகியோர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்துக்கு பெருமை சேர்த்த இவ் வீர வீராங்கனைகளின் திறமை மோன்மேலும் பெருகுவதுடன் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என கல்வி அமைச்சின் செயலாளரும் மாகாணக் கல்விப் பணிப்பாளரும் வாழ்த்தியுள்ளனர். (ச-5)

## ஊடகவியலாளர்கள்...

சேர்ந்த தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு கற்பித்துக் கொடுத்துள்ளார்கள். இத்தவறான எண்ணம் தமிழ் இளைஞர் யுவதிகளின் மனங்களில் இருந்து நீக்கப்பட வேண்டும் தமிழ்,சிங்கள இனங்களுக்கிடையில் உண்மையில் பிரிவினை கிடையாது.

1983 ஆம் ஆண்டு கலவரத்தின்போது தமிழர்களை அதிகம் காப்பாற்றியவர்களும் சிங்களவர்கள்தான். எனவே உண்மையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் எந்தப்பிரச்சினையும் இல்லை.

வடக்கில் யுத்தத்தால் இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்கு இயல்பு வாழ்க்கையைப் பெற்றுக்கொடுக்க நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் பங்களிப்பு வழங்கவேண்டும் என்றார். (ச-5)

## அரசுக்கு ஆதரவு அளித்...

ஒழுக்காற்று குழு தீர்மானிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஒரே நாளில் மறுசீரமைப்பு பணிகளை நிறைவேற்ற முடியாது.

மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிறிது காலம் எடுக்கும் எனவும், மறுசீரமைப்பு பணிகள் கைவிடப்பட்டுள்ள தாக வெளியான தகவல்களில் உண்மையில்லை.

இளம் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களுக்கு முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் செயற்படுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்னடிப்பதாக தெரிவிக்கப்பட்டது. ரணிலுடன், தேசிய பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட சிலரே இணங்கிச் செயற்படுவதாகவும் கூறப்பட்டது. (ச-5)






## ஜனாதிபதியை சந்திக்கவென வித்தியாசமான போராட்டம்

கொழும்பில் தனிநபர் ஒருவர் வித்தியாசமான முறையில் விகாரமகாதேவி பூங்காப் பகுதியில் அமைந்துள்ளதூண் ஒன்றின் மீது ஏறி நின்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்.

40 அடி உயரமுடைய விளம்பரப்பதாகை ஒன்றின் உச்சியில் ஏறிநின்றே குறித்த நபர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்.

தனதுபிரச்சினை குறித்து ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து அவருடன் உரையாட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த குறித்த நபர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தீயணைப்பு இயந்திர பாரமுயர்த்தியொன்று அந்த இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. மற்றொரு நபர் மூலம் ஆர்ப்பாட்டக்காரருடன் பேச்சுநடத்திய பின் அவர் அமைதியாகக் கீழே இறக்கப்பட்டார். ஜனாதிபதியை தான் சந்திக்காவிட்டால் தற்கொலை செய்யப் போவதாகவும் அவர் எச்சரித்திருந்தார். (ச-5)

## வட மாகாண சுகாதார அமைச்சு கிளிநொச்சிக்கு இடமாற்றம்

வடமாகாண சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சும் அதன் கீழ் இயங்கும் சகல திணைக்களங்களும் அடுத்த மாத நடுப்பகுதியில் கிளிநொச்சி நகருக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றன. வடக்கில் அரசாங்கம் முன்னெடுத்துவரும் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களை உரியமுறையில் உடனுக்குடன் நடைமுறைப்படுத்தும் நோக்குடனேயே இந்த அமைச்சையும் கிளிநொச்சிக்கு மாற்றத் தீர்மானித்துள்ளதாக ஆளுநர் தெரிவித்தார். (ச-5)

## வவு. நகர...

னர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

அவரது இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவே தாங்கள் மைதானத்தில் அமர்ந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் பொதுமக்களை இணைத்துக்கொண்டு தமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்த இடத்திற்கு வருகைதந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பாக இந்த மாத இறுதிக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்ததுடன் அதுவரையில் தமக்கு கால அவகாசம் தருமாறு கேட்டுள்ளனர். (ச-5)

நகர சபை, யாழ்ப்பாணம்,



## பொன்சேகாவும் பசி...

செய்தி ருந்தார். அந்த மனு மீதான விசாரணை ஐவர் அடங்கிய நீதிப திகள் குழு முன்னிலையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

சரத் பொன்சேகா நீதிமன்றத் திற்கு வருகை தந்த வேளை அமைச் சர் பசில் ராஜபக்ஷவும் அங்கிருந் துள்ளார். அவ்வேளையில் இருவரும் நலம் விசாரித்து கைகுலுக்கிக் கொண்டனர். (ச–5)

## முல்லைத்தீவு மாவட்ட அபி...

மகிந்தானந்த அளுத்கமகே, நாடாளு மன்ற உறுப்பினர்களான ஸ்ரீரங்கா, சந்திரகுமார், நாமல் ராஜபக்ஷ உட் பட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இதில் முல்லைத்தீவு பிரதேசத் திற்கான மின் சாரம் மற்றும் சுகாதார வசதிகளை விரை வில் ஏற்படுத்துவதென முடிபு எடுக்கப் பட்டது. கடற்தொழிலாளர்களுக்கு வலை கள் வழங்குதல், அரசு சேவை வெற்றி டங்களை நிரப்புதல், குளங்களின் புனர மைப்பு, இளைஞர் சேவை நிறுவனங் களின் புனரமைப்பு என பல்வேறு திட்டங் களை விரைவில் மேற்கொள்வதென வும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் ஒவ்வொரு மாதமும் அரசு தரப்பு எம்.பிக்கள் முல்லைத்தீவுக்குச் சென்று இரண்டு நாட்கள் அங்கு தங்கி யிருந்து அதன் அபிவிருத்திகுறித்து பேசு வது எனவும் முடிபெடுக்கப்பட்டது. (ச–5)


BRITISH COUNCIL

British College of English

யாழ்ப்பாணத்தில்...

IELTS

20th November பரீட்சைகள்...

இரண்டாவது தடவையாக British Council Colombo யாழ்ப்பாணத்தில் November 20 ஆம் திகதி IELTS பரீட்சைகளை நடாத்த தீர்மானித்துள்ளது.

நீங்கள் எங்கு IELTS படித்துக் கொண்டு இருந்தாலும் அல்லது படித்து முடித்து பரீட்சை எடுப்பதற்கு ஆயத்தமாக இருந்தாலும் எமது கல்லூரியில் வந்து பதிவு செய்வதன் மூலம் பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே பிரயாணச் செலவுகள் எதுவுமின்றி எழுதமுடியும். பரீட்சைக் கட்டணம் ரூபா 16700/=

Speaking Test பிரித்தானியர்களால் யாழ்ப்பாணத்திலேயே நடாத்தப்படும்.

November 20 இல் நடைபெற இருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்த இருப்பவர்கள் நன்மைகருதி British College of English 18.09.2010, இல் ஓர் புதிய IELTS வகுப்பு ஒன்றை ஆரம்பிக்கின்றது.

வகுப்புக்கள் 2.00 மணி முதல் 5.00 மணிவரை Saturday & Sunday நடைபெறும்

We Provide
* Updated course modules
* Materials approved by British Council which are quite new including Cambridge 7
* 40 practice test
* Free IELTS pack & Mock Exams

| Course Schedule | Saturday & Sunday |
|---|---|
| Duration | 10 Weeks |
| Time | 2.00 p.m 5.00 p.m |
| Commencement | 18th Nov. 2010 |

கடந்த April 2010 இல் நடைபெற்ற IELTS பரீட்சைகளில் எமது கல்லூரியில் படித்துப் பரீட்சை எழுதிய மாணவர்களில் ஒருவர் Band - 8 இருவர் 7.5 நால்வர் 6.5 எடுத்து சாதனைபுரிந்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

BRITISH COLLEGE OF ENGLISH
IELTS Registration Centre for British Council
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P: 0213216027 - 0778803887

(C-1174)


## கொழும்பு மகசின்...

நிகழ்வில் பேசும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

குற்றவியல் கோவையையும் முற்று முழு தாக மாற்றி அமைக்க வேண்டிய தேவையுள்ளது. இதன் மூலம் சிறைச்சாலைகளில் நெருக் கடியைக் குறைக்கமுடியும்.

இது நாட்டுக்கும் கைதிகளின் புனர்வாழ்வுக்கும் நன்மையாக இருக் கும். கீழ்மட்ட நீதிமன்ற நீதவான்கள், சிறு குற்றம் இழைத்தவர்களை சமூக சேவைக்கு அனுப்பவழிவகுக் கும் சட்ட ஏற்பாடுகளை பயன்படுத்து வதில்லை.

ஐ.ஆர்.சிக்களும் போதைவஸ்து பெரும் முதலாளிகளும் குற்றச்செயல் களை தொழிலாகச் செய்வோரும் பாதுகாப்பாக இருந்து கொண்டு தொலைபேசி, கூட்டாளிகளின் துணையோடு குற்றச் செயல்களை தொடர்வதற்கான இடமாக சிறைச் சாலைகள் மாறிவிட்டன எனவும் ஜனாதிபதி கூறினார். (ச–5)

## இலங்கைப் பிரச்...

ஐக்கிய நாடுகள் சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நாளாந்த செய்தி யாளர் சந்திப்பு ஒன்றின் போது இலங்கை, சூடான் மற்றும் கொங்கோ போன்ற நாடு களில் முக்கியமான பிரச்சினைகள் குறித்து எந்தக் கருத்துக்களும் வெளியிடப்பட வில்லை.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடு கள் சபையினால் ஆலோசனைக் குழு நியமிக் கப்பட்டு பல மாதங்கள் கடந் தும் அது இயங்க வில்லை என்பதுடன் அதன் நான்கு மாதகால அவகாசம் குறி த்த தகவல்களும் வெளியாக வில்லை.

இந்த நிலையில் பான் கீ மூன் குறித்த நாடுகளின் பிரச்சினை களை மூடிமறைக்க முயற்சிப்பதாக இன்னர் சிட்டி பிரஸ் குற்றம் சுமத் தியுள்ளது.

கொங்கோவில் இடம்பெற்ற இனப் படு கொலை மூடிமறைப்பதற் காகவே அவரது விஜயமும் அமையவுள்ளதாக வும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இந்த மாதம் நடை பெறவுள்ள ஐக்கிய நாடுகளின் சபை யின் பொதுக் கூட்டத்தை தமது இரண் டாவது பதவிக்காலத்தில் நீடித்துக் கொள் வதற்காக பயன்படுத்தும் முயற் சியில் பான் கீ மூன் இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ச–5)


கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி – திக்கம் கிளை

ENGLISH CLASS
பிரிவு II
ஆரம்பம் : 18.09.2010
(மு.ப 6.45)
உங்கள் ஆசிரியர்: S.சுகோபன்
Note : ❖ தரம் 6 முதல் A/L வரை
❖ A/L எடுத்தவர்களுக்கு
(18.09.2010 வரை அனுமதி வழங்கப்படும்)
(2459)



மாபெரும் மலிவு விற்பனை யாழ்ப்பாணத்தில்...




AHIEZER SUPPLIERS

எகி(H)சர் சப்ளையர்ஸின் யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் உள்ள புதிய காட்சி அறையில் (பல வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கமைவாக) இன்னும் ஒரு படி மேலே சென்று பல பொருட்கள் உங்களுக்காக விசேட விலைக் கழிவுடன் .....!

- Tiles விற்பனையில் புதிய புரட்சி ... India, Australia Tiles Company ஆன H & R Johnson (Super cut) Tiles நேரடி இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது. (www.hrjindia.Com) (சர்வதேச தரநியமம் ISO மற்றும் இலங்கை தர நியமம் SLS தரச்சான்று பெற்றது)
- உங்கள் குளியலறை புதிய பொலிவு பெற India, Malaysia விலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட Commode, Squatting Pan, Bathroom Fittings.
- மிகக் குறைந்த விலையில் S - LON PE+ நீர்த்தாங்கிகள்
- 2 வருட உத்தரவாதத்துடன் Venus, Bajaj Ceiling Fans.
- *Electrical Wires (வயர்) & Electrical Accessories (உதிரிகள்), New Design show Lamps.*
- ISO, SLS தரம் வாய்ந்த PVC Pipes, Conduit Pipes & Fittings.
- Large Diameters PVC Pipes and Fitting available



★ தரமாகவும் மலிவாகவும் நீங்கள் ஏமாற்றமடையாமல் கொள்வனவு செய்ய வேண்டுமானால் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

25000 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு வாகன சேவை இலவசம்...!

[Building Department, Contractors, NGO'S, Water Board, Plumbers & Electricians] ஆகியவற்றுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

AHIEZER SUPPLIERS
No .289, Brown Road, Kaladdi Junction, Jaffna.
021 5100 700
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும், தொழில்நுட்பக் கல்லூரிக்கும் அருகில்)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 04 . 06 . 1935



இறப்பு 16 . 08 . 2010

### திருமதி பூபாலசிங்கம் பாக்கியம்

(மாதகல் மேற்கு, மாதகல்)

ஆலமரமாய் விழுதுகளாய் எமைத்தாங்கி
அனைத்திலும் நாம் வளர ஏணியாகி
அன்பினிலே எமக்கொரு ஆலயமாகிய
அன்பு அம்மாவே !
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உமை
அன்று மாலைவரை நீ புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா
நாடு கடந்து வந்து நாமுமைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்தருந்த கணங்களும்
பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் நீ
கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உம்மை நினைவூட்டுதம்மா!
உம் சிரித்த முகத்தினையும்
உம் சீரிய அன்பினையும்
இனி என்று காண்போம் நாம்.
ஜென்மங்கள் கழிந்தாலும்
எம் சந்ததி இருக்கும்வரை
தொடர்ந்திடும் உம் நினைவு

கடந்த 16.08.2010 அன்று அமரத்துவம் எய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணக்கிரிகைகளின்போது எமக்கு உறுதுணையாய் நின்ற உற்றார் உறவினர்களுக்கும் அயலவர், நண்பர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடித மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் பத்திரிகை, கண்ணீர் அஞ்சலி மூலம் அஞ்சலி தெரிவித்தோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசை புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயபூர்மான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 15.09.2010 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.

பழைய தபால் கந்தோர் ஒழுங்கை,
சங்கானை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
– குடும்பத்தினர்

(2469)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.